Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2035 புரட்டாதி 27 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷஃபான் 27 (13.10.2004) புதன்கிழமை இதழ்: 13

இன்றைய நாகரிகம்! நாளைய நாகரிகம்!

மகாராசி சில்க்ஸ்

சகல நிகழ்வுகளுக்கும் மகாராசியான ஸ்தாபனம்

மகாராசி சில்க்ஸ்

59, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

T.P No - 0777286247

(c-2205)

## பேச்சுக்கள் ஆரம்பிக்காவிடின் யுத்தநிறுத்தத்தைப் பாதிக்கும்!

### சுவிஸ் வெளிவிவகார அமைச்சர்



(கொழும்பு)

தடைப்பட்டுப் போயுள்ள சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதிலுள்ள தாமதத்துக்கு, அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலுள்ள பரஸ்பர நம்பிக்கையீனமே காரணமென சுவிற்சர்லாந்து நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் மிக்கெலின் கல்மிறே அம்மையார் தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது - தற்போது தடைப்பட்டுப் போயுள்ள சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படாதுவிட்டால், அது தற்போதைய யுத்தநிறுத்தத்தை மோசமான நிலைக்கு இட்டுச் சென்றுவிடும்.

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கு தயாராகவே உள்ளனர். விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனை விவாதத்துக்கு உட்படுத்தமுடியாதவை அல்ல.

அத்துடன், எதிர்கால பேச்சுக்களில் அடிப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தந்தையே மகனை சுட்டுக் கொன்றார்!

### மன்னாரில் சம்பவம்

(மன்னார்)

குடும்பத்தகராறு காரணமாக தந்தையே மகனைச் சுட்டுக்கொன்ற சம்பவமொன்று மன்னார் பண்டிவிரிச்சானில் நேற்று இடம் பெற்றது.

மன்னார் கல்வி வலய கணிதபாட சேவைக் கால ஆலோசகரான இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஜுலியன் (வயது 35) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

தகப்பனுக்கும், மகனுக்கும் இடையே (12 ஆம் பக்கம் பார்க்க)

## மோட்டார் சைக்கிளுடன் புரண்ட குடும்பஸ்தர் அல்லைப் பிட்டியில் பலி!

(யாழ்ப்பாணம்)

அல்லப்பிட்டியில் மோட்டார் சைக்கிளில் விறகு ஏற்றிக்கொண்டு சென்ற ஒருவர் அதுகுப்புறக் கவிழ்ந்ததில் நசியுண்டு மரணமானார்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை இடம் பெற்றது. நாரந்தனையைச் சேர்ந்த 30 வயதான க.மங்களேஸ் என்பவரே இந்தச் சம்பவத்தில் மரணமடைந்தவராவார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் இந்தியா முக்கியபங்கு வகிக்க வேண்டும்!

# இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில்

# இந்தியா முக்கியபங்கு வகிக்க வேண்டும்!

## இந்தியத் தலைவர்களிடம் ரணில் கோரிக்கை



(புதுடெல்கி)

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விவகாரத்தில் இந்திய அரசாங்கம் முக்கியமான பங்கை வகிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தியத் தலைவர்களிடம் கோரிக்கைகளை விடுத்தார்.

நேற்று சவுத் புளொக்கிலுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் இல்லத்தில் நடைபெற்ற சந்திப்பின் போதும், இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமுடனான சந்திப்பின்போதும் இவர் – இலங்கையில் சமாதான முயற்சியில் ஏற்பட்டிருக்கும் தேக்கநிலைகுறித்து விளக்கியதுடன் – தீர்வு முயற்சிகளில் இந்தியா முக்கிய பங்கெடுக்கவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



மனித உ்ரிமை அதிகாரியைத் தாக்கிய

## பொலிஸாரைக் கண்டுபிடிக்க இன்று அடையாள அணிவகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் பொலிஸாரால் தாக்கப்பட்டமை தொடர்பான அடையாள அணி வகுப்பு இன்று காலை 9 மணிக்கு யாழ்.நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு பொலிஸ் தலைமையகத்தைச் சேர்ந்த குற்றப்புலனாய்வு தடுப்பு பிரிவு உயரதிகாரிகள் குழுவொன்று நேற்று யாழ்.குடாநாட்டுக்கு வருகைதந்தது.

யாழ்.மாவட்ட மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பதிகாரி றொகான் சந்திரசேகர, விசாரணை அதிகாரி பெறோல் ஆகியோரை இவர்கள் நேற்று மாலை 4 மணியளவில் யாழ்.மனித உரிமை ஆணைக் குழு அலுவலகத்தில் சந்தித்து சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் குறித்து

## நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு!

(புதுடெல்கி)

இலங்கையின் சமாதான முயற்சிகளில் எதிர்நோக்கப்படும் தடைகள், சவால்கள் குறித்து நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனுடன் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க புதுடெல்கியில் கலந்துரையாடினார்.

இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொண்டிருக்கும் விதார் ஹெல்கிசனும், ரணில் விக்கிரமசிங்கவும் நேற்று புதுடெல்கியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் சந்தித்துப் பேசினர்.

இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் உடனிருந்த இந்தச் சந்திப்பு குறித்து நோர்வே வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் பி.பி.சிக்கு கருத்து வெளியிடுகையில் -

ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பின் போது இலங்கையின் தற்போதைய நிலைவரம் பற்றி அவருடைய கருத்துக்களைக் கேட்டறிந்தேன். மேலும் சமாதான நடவடிக்கைகளில் இலங்கை அரசுக்கு ஆதரவு அளிக்க தயாராக இருப்பதாக அவர் சமீபத்தில் விடுத்த அறிக்கை பற்றியும் அவர் என்னிடம் விளக்கினார். நாங்கள் இலங்கை விவகாரம் பற்றி இந்தியாவோடு தொடர்ந்து மேற்கொண்டுவரும் கருத்துப்பரிமாற்றமாகவே புதுடெல்கி சந்திப்புக்கள் அமைந்தன. தற்போது இலங்கையில் பெருகிவரும் வன்முறைகள், படுகொலைகள் பற்றி இரண்டு தரப்பிலும் கவலைகள் தெரிவிக்கப்பட்டன. மேலும் இலங்கை அரசு - விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தைகளுக்கு திரும்ப வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

இந்திய அரசும், நோர்வே அரசும் இலங்கையில் இரண்டு தரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசைக்கு வரும்படி செய்வதற்கு ஒருமித்த கருத்தைக் கொண்டிருக்கும்.

(12 ஆம் பக்கம் பார்க்க்)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# கலாநிதி கன்னங்கரா விருதுக்கு யாழ்.இந்துக்கல்லூரிக்கு அழைப்பு

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் உயர் சித்தியடைந்த 40 மாணவர்களுக்கும், அவர்களுக்குப் பிரதான பாடங்களைக் கற்பித்த ஆசிரியர்களுக்கும் திறமை மதிப்பீட்டு வகையில் - மாணவர்களுக்கு தங்கப் பதக்கமும், சான்றிதழும், ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் ஜனாதிபதி மாளிகையில் இன்று நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு யாழ்.இந்துக் கல்லூரியிலிருந்து மேற்படி பரீட்சையில் தோற்றிக் கணிதப்பிரிவில் அகில இலங்கை ரீதியில் ஏழாம் இடத்தைப் பெற்ற சதானந்த சர்மா ரமணன், கலைப்பிரிவில் அகில இலங்கை ரீதியில் மூன்றாம் இடத்தைப் பெற்ற குமாரவடிவேல் குருபரன் ஆகியோரும் -

அவர்களுக்கு பிரதான பாடங்களைக் கற்பித்த ஆசிரியர்களான கு.மோகன் (இணைந்த கணிதம்), இ.புஸ்பநாதன் (பௌதிகவியல்), ந.மகேஸ்வரன் (இரசாயனவியல்), சி.தயாபரன் (பொருளியல்), ஆர்.கணபதிப்பிள்ளை (ஆங்கிலம்), வ.தவகுலசிங்கம் (அரசியல் மூலதத்துவம்) ஆகியோரும், இவர்களுக்கு வழிகாட்டியாக விளங்கிய அதிபர் அ.சிறிக்குமாரன் ஆகியோரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

## தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகளுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிலையங்களின் நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று வடமராட்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நாளை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. (17)


## சிறு விளம்பரம்

### முகமதி கிறைண்டிங் மில்

தேசியக்காய் ஊறுகாய், வெள்ளைப்பூடு, ஊறுகாய், மோர் மிளகாய், சீயாக்காய் பவுடர், பிளிச்சிங் பவுடர் ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முகமதி கிறைண் டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ். இல : 777, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (C/3249)

ராஜா யாழ்ப்பாணம்.

தனுஷ், சாயாசிங் நடித்த



திருடா திருடி

பு.நே 10.30, 2.30 மட்டும்

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா, நம்பியார் நடித்த ஆயிரத்தில் ஒருவன் இரவு 6.30, 9.30 மட்டும்

(சி-2725)

நாகம்ஸ் சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடான



ஸ்ரீகாந்த், சினேகா, கபாலி மற்றும் நாகேஷ் நடித்த

(ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.0010.00 (பு.நே)

நிறஞ்சனாஸ் சங்கானை

விஜய், சோனியா அகர்வால் நடித்த



(சி-2723)

தினசரி காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)


# உடுவில் கோட்ட பாடசாலைகளின் சகலகலா வல்லி பாமாலை போட்டி முடிவு வெளியானது

(யாழ்ப்பாணம்)

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சகலகலா வல்லி பாமாலைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு ஆகிய இரு பிரிவுகளாக ஆண்,பெண் இருபாலாருக்கும் இடையில் நடத்தப்பட்ட மேற்படி போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு :

### கீழ்ப்பிரிவு ஆண்

முதலாம் இடம் - ப.சாயிராம் (இணுவில் இந்துக் கல்லூரி).

இரண்டாம் இடம் - சோ.யதுகுலம் - இணுவில் மத்திய கல்லூரி).

மூன்றாம் இடம் - வி.கோவேந்தன் (இணுவில் மத்திய கல்லூரி).

### கீழ்ப்பிரிவு பெண்

முதலாம் இடம் - க.கிரிஷா (ஸ்கந்தவரோதயா கல்லூரி).

இரண்டாம் இடம் - க.அருள்மதி (உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்).

மூன்றாம் இடம் - ஸ்ரீ வள்ளி (இணுவில் இந்துக் கல்லூரி).

### மேற்பிரிவு ஆண்

முதலாம் இடம் - கு.நிர்மலன் (ஸ்கந்தவரோதயா கல்லூரி).

இரண்டாம் இடம் - சி.சிவதர்சன் (இணுவில் இந்துக் கல்லூரி).

மூன்றாம் இடம் - புவிஸ்வரன் (இணுவில் இந்துக்கல்லூரி).

### மேற்பிரிவு பெண்

முதலாம் இடம் - கோ.ஹம்சத்வனி (ஸ்கந்தவரோதயா கல்லூரி).

இரண்டாம் இடம் - ஸ்ரீ.சுயாத்தா (இராமநாதன் கல்லூரி).

மூன்றாம் இடம் - சி.கலிஸ்ரா (ஸ்கந்தவரரோதயா கல்லூரி). (91)

# வடமராட்சி பிரதேசத்தில் மதுபான விற்பனை நிலையத்தை எட்டு மணிவரை திறக்க அனுமதி!

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சியில் இயங்கும் மதுபானசாலைகள் இரவு 8 மணி வரை இயங்குவதற்கு கலாசாரம் பேணும் குழு அனுமதி வழங்கியுள்ளது.

தமது வியாபாரம் பாதிக்கப்படுவதாக மதுபானசாலை உரிமையாளர்கள் விடுத்த கோரிக்கையையடுத்தே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதற்குமுன் பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள், போதைக்கு அடிமையாதல் கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இரவு 7 மணியுடன் அனைத்து மதுபானசாலைகளும் மூடப்படவேண்டும் என்ற கடுமையான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. எனினும்,தற்போது கலாசாரத்தைப் பேணும் குழுவினரின் விழிப்பு நடவடிக்கைகளால் இளைஞர்கள் பாடசாலை மாணவர்களின் தகாத செயற்பாடுகள் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது.

இத்துடன் மதுபானசாலைகளை இரவு 8 மணிவரை திறப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

குறித்த நேரத்துக்குப் பின்னர் மதுபானசாலைகள் திறப்போருக்கு எதிராக கடுமையான நடவடிக் கைகள் எடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

# சகல கலா வல்லி பாடசாலையை மீள இயக்கக் கோரிக்கை!

(வடமராட்சி கிழக்கு)

இராணுவத்தினரின் பாவனையில் உள்ள மறவன்புலவு சகல கலா வல்லி பாடசாலையை மீள இயக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இந்தக்கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலையை இராணுவ முகாமாகப் பாவிப்பதனால் மாணவர்களின் கல்வி பாதிப்படைவதாக பெற்றோர்கள் தெரிவித்தனர்.

இது சம்பந்தமாகப் பல முறைப்பாடுகள் செய்திருந்தும் இது வரை இப்பாடசாலையை திறப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. என இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர். (17)

# முகாம்களில் தங்கியுள்ளோருக்கு வீட்டுப் பாவனைப் பொருட்கள்!

(வடமராட்சி கிழக்கு)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வசிக்கும் 604 குடும்பங்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் வீட்டுப்பாவனைப் பொருட்களை வழங்கவுள்ளது.

பத்து முகாம்களைச் சேர்ந்த மக்களுக்கே இந்தப் பாவனைப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன. நாகர்கோவிலிலிருந்து இடம்பெயர்ந்து கற்கோவளம் புனித நகர் முகாமில் வசிக்கும் மற்றும் பலாலி, மயிலிட்டி பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து சுப்பர்மடம் எரிஞ்சம்மன் கோவிலடி, சக்கோட்டை, பொலிகண்டி கிழக்கு முகாம்களில் வசிக்கும் 604 குடும்பங்களுக்கே வீட்டுப் பாவனைப் பொருட்களை யு.என். எச்.சி.ஆர் வழங்கவுள்ளது.

ஒரு குடும்பத்துக்கு தலா 7000 ரூபா பெறுமதியான பொருட்களே வழங்கவுள்ளதாக செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (14)

# சர்வதேச தினங்களை முன்னிட்டு மாணவர்களிடையே போட்டி!

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தினங்களை முன்னிட்டு வடமராட்சிக் கல்வி வலயம் போருட் ஒளி நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தும் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பொருட்காட்சிப் போட்டி எதிர்வரும் 17ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்பு, உலகசுற்றாடல் சர்வதேச போதைப்பொருள் சர்வதேச நல்லொழுக்கம் போன்றவற்றைக் காட்சிப்படுத்தும் ஆக்கங்கள் தீய விளைவுகளைத் துல்லியமாக எடுத்துக்காட்டக்கூடியதாகவும் விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடியதாகவும் அமையும் வகையில் போட்டிகள் நடைபெறவுள்ளது.(12)



வலி.வடக்கு பிரதேசசபை மண்டபத்தில் - அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி சேவையில் 25 வருடங்கள் பணி புரிந்தவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் - சபையின் தொழில் நுட்ப உத்தியோகத்தர் வே.தர்மலிங்கத்துக்கு, யாழ்.மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் உதவி ஆணையாளர் ஆ.இராசையா பரிசில் பொதியினை வழங்குவதைக் காணலாம். (101)


## கேள்வி கோரல்

### யாழ்ப்பாண தொல்லியல் நூதனசாலைக் கட்டட திருத்த வேலை

15.09.2004 ஆம் திகதிய பத்திரிகைகளில் பிரசுரமான மேற்படி கேள்வி கோரலில் பிரசுரிக்கப்பட்ட திகதிகள் பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளன.

கேள்விப் படிவங்களை 2004.10.22 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட கேள்விப் படிவத்தில் இணைப்பிரதிகளில் 2004.10.24 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

செ.பத்மநாதன்,
அரசாங்க் அதிபர்,
யாழ்.மாவட்டம்.

(C-3258)


# உழைக்கும் பட்டதாரிகளுக்கான அவசர கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அரச சேவையிலுள்ள பட்டதாரிகளுக்கு உரிய பதவிகள் கிடைக்க வழிசெய்து தரும்படி ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தது தொடர்பாக, ஜனாதிபதி உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு நிதி அமைச்சருக்கு சிபார்சு செய்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான அவசர கலந்துரையாடல் எதிர்வரும் 16 ஆம் திகதி 3 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அன்றைய தினம் எஸ்.எல்.ஏ.எஸ் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் சகலருக்கும் வகுப்பு ஒழுங்குகளும் செய்யப்படும் எனவும் சங்கம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## அறிவித்தல்

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை உப - பணிமனைப் பிரிவில் உள்ள வேம்பிராய் மயானத்தை புனரமைக்கும் வகையில் பின்வருமாறு கேள்வி கோரப்படுகின்றது.

"இந்த மயானத்தில் உள்ள கற்களை சராசரி 2-3 அடி ஆழத்துக்கு அகழ்ந்து கற்களை எடுத்த பின்பு தரையை மட்டப்படுத்த வேண்டியுள்ளது"

மேற்குறிப்பிட்ட வேலையை இயந்திர மூலம் செய்து தருவதற்கு 01 மணித்தியாலத்துக்கு தங்களால் கோரப்படும் தொகையைக் குறித்து "செயலாளர் சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்" என்னும் முகவரிக்கு 20.10.2004ம் திகதிக்குப் பிந்தாமல் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மேலதிக விபரங்களை சாவகச்சேரி பிரதேசசபை தலைமையலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

சாவகச்சேரி பிரதேசசபை,
தலைமையலுவலகம்,
கொடிகாமம்.
07.10.2004 (C-3257)

கு.ந.பாலச்சந்திரன்,
செயலாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை.


# கணித விஞ்ஞானப் போட்டியில் மாகாண மட்டத்தில் 2 ஆம் இடம்



(யாழ்ப்பாணம்)

அண்மையில் நடைபெற்ற வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான கணித விஞ்ஞான மாகாண மட்டப் போட்டியில் யாழ்.விக்கினேஸ்வராக் கல்லூரியில் தரம் எட்டில் கல்வி கற்றும் மாணவன் ஆனந்தலிங்கம் நிதர்ஷன் என்பவர் மாகாண மட்டப் போட்டியல் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். (12)

## பரிசளிப்பு விழா

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் பரிசளிப்பு விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் சு.புண்ணியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனும், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச. கயிலாயநாதனும் கலந்துகொள்ளவுள்ளார்.

யாழ்ப்பாணம்

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் திருகோணமலை செல்லவுள்ளனர்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களும் எதிர்வரும் 15,16,17 ஆம் திகதிகளில் திருகோணமலைக்கு செல்ல வுள்ளனர்.

இவ்வாறு செல்லும் கூட்டமைப்பினர் திருமலையிலுள்ள முஸ்லிம் பிரதேசத்துக்குச் சென்று அவர்களுடன் கலந்துரையாடல்களை நடத்த வுள்ளனர்.

எதிர்வரும் 15 ஆம் திகதி மாலை மூன்று மணிக்கு திருமலைநகரசபை மண்டபத்தில் முதலாவது கூட்டம் இடம் பெறவுள்ளது. இதில், மதப்பிரமு கர்கள் மற்றும் முஸ்லிம் பிரமுகர்களையும் இவர்கள் சந்திக்கவுள்ளனர். இதனையடுத்து அன்றைய தினம் மாலை 5மணிக்கு திருமலை சிவன் கோவில் மைதானத்தில் பொதுக்கூட்டமொன்று இடம் பெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் செய்துள்ளார்.

ஏற்கனவே கடந்த ஓகஸ்ட் முதலாம் திகதியும் செப்ரெம்பர் மாதத் திலும் கூட்டமைப்பினர் திருகோணமலைக்கு செல்வதாக இருந்தபோதி லும், இது பின்னர் ஒத்திவைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (04)

# சுதந்திரக் கட்சி எம்.பிக்கள் அனைவருக்கும் அமைச்சு பதவி

## ஐ.தே.கட்சி கண்டன அறிக்கை

மோசம் செய்து முழு நாட்டை யும் ஏமாற்றிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தங்கள் பிரதான கட்சியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர், பிரதியமைச்சர் பதவிகளை வழங் கியதன் மூலம், மேலும் ஒரு உலக சாதனையை நிகழ்த்தி யுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி வெளி யிடப்பட்ட விசேட அறிக்கையில் குற்றம் சாட்டியுள்ளது.

தமது கட்சியிலுள்ள அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனை வருக்கும் அமைச்சு, பிரதி அமைச் சர் பதவிகளை வழங்கிய ஜனாதி பதி - அதிகரித்துச் செல்லும் பொருட் களின் விலை உயர்வு குறித்து, நாட்டு மக்களிடம் நாட்டைப் பற்றிச் சிந்தித்து அதனைத் தாங்கிக் கொள்ளுமாறு கோரியுள்ளார்.

கூட்டமைப்பு அரசின் இந்த மக் கள் துரோக நடவடிக்கையை ஐக் கிய தேசியக் கட்சி கடுமையான அருவருப்போடு மக்களுக்குத் தெரி யப்படுத்துகிறது.

அதிகாரத்துக்கு வந்து ஆறுமாத குறுகிய காலத்துக்குள் அத்திய வசிய உணவுப் பொருட்கள் மற்றும் சமையலறை எரிவாயு, மின்சாரம், எரிபொருள் உட்பட அனைத்து பொருட்களினதும் விலையை உல குக்கு எங்குமில்லாதவாறு உயர்த்தி யதன்மூலம் சாதனை படைத்துள்ள அரசாங்கம் புதிதாக நியமிக்கப்பட் டுள்ள இந்தப் பிரதியமைச்சர்களின் தொகை 75 ஐ தாண்டியுள்ளது.

அத்தோடு தமது கட்சியின் அனைத்து நாடாளுமன்ற உறுப் பினர்களுக்கும் அமைச்சர், பிரதி அமைச்சர்பதவிகள் மூலம' பொறுப் புகள், அதிகாரங்கள் என்பன கிடைக் கப் பெற்று, சுகபோகங்களை அனுபி விப்பதற்கு வழிகோலப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு அதிகாரத் துக்கு வந்ததும், அமைச்சர்களின் தொகையை 25ஆகக் குறைப்பதாக கூறிய ஜனாதிபதி சந்திரிகா - 2004 ஆம் ஆண்டு அமைச்சர், பிரதி அமைச் சர்களின் தொகையை கடுமையாக வரையறை செய்யப்போவதாகவும், அமைச்சர்களின் வெளிநாட்டுப் பய ணங்கள் மற்றும் அலுவலக வாக னங்கள் என்பவற்றையும் குறைக்கப் போவதாகக் கூறியிருந்தார். இது குறித்து ஜே.வி.பியினர் பலமுறை மக்களின் முன்னால் சத்தியப் பிர மாணங்களும் செய்துள்ளனர்.

அதிகாரத்துக்கு வந்தவுடன் ஒரு அமைச்சருக்கு நான்குக்கும் அதிக மாக வெளிநாட்டுப் பயணங்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என, கடித மூலம் ஆணைவழங்கியதை நாங்கள் மறக்கவில்லை. ஆனால், இன்று நிகழ்ந்துள்ளது அதற்கு மாறான செயற்பாடே.

நாடாளுமன்ற உறுப்பினர்க ளுக்கு, தமது சிறப்புரிமைகளுக்கு கிடைக்கும் சம்பளம்,போக்குவரத்து வாகனம் ஆகியவற்றுக்கு வரி இன்றி யும், வாகனம் ஆகியவற்றுக்கும் தொலைபேசி, அஞ்சல் வசதிகளு க்கும் மேலதிகமாக அமைச்சர் பிரதி அமைச்சர் என்ற வகையில் மேலும் பல சிறப்புரிமைகள் கிடைக்கவுள்ளன.

வாக்குறுதிகள் எதனையும் நிறை வேற்றுவதற்கு இயலாமல் உடைந்து தகர்ந்து விடும் ஜே.வி.பி உட்பட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணியின் இந்தத் துரோகச் செயற்பாடு களை ஐக்கிய தேசியக் கட்சி கடுமை யான வெறுப்போடும் தெரியப்படுத் துவதாக அந்த அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# அம்பாறை கொலைகளுடன் தொடர்புடைய மேலும் மூன்று முஸ்லிம் நபர்கள் கைது!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் முஸ்லிம் பிரதேசங்களில் இடம்பெற்ற ஆட் கொலை, கொள்ளைச் சம்பவங்களு டன் தொடர்புடைய மேலும் மூன்று முஸ்லிம் நபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அம் பாறை, சம்மாந்துறைப் பிரதேசத்தி லுள்ள பாலையடிவெட்டி என்ற இடத்திலுள்ள வீடொன்றில் இரும்புப் பெட்டிக்குள்ளிருந்து ரி 56 ரகத் துப்பாக்கி ஒன்றும் அதற்கான ரவை கள் 25, ரவைக்கூடு ஒன்று என்ப வற்றுடன் உள்ளூரில் தயாரிக்கப் பட்ட துப்பாக்கி ஒன்றும் கைப்பற்றப் பட்டது.

இது சம்பந்தமாக வீட்டின் உரி மையாளரான உதுமான் லெப்பை ஹக்கீம் என்பவர் கைது செய்யப் பட்டார்.

இவர் கொடுத்த தகவலின் அடிப் படையில் செங்கல் கிராமத்தில் இவ ரது சகாவான அழியார் முபாரக் அலி என்பவரின் வீடு சோதனையிடப்பட்ட போது, போலிக் கைத்துப்பாக்கி, சீருடை, இலக்கமற்ற மோட்டார் சைக்கிள் உட்படப் பல பொருட்கள் கைப்பற்றப்பட்டதையடுத்து அவரும் கைதுசெய்யப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை பொலி ஸார் முகமது யூசுப் முகமது நகீம் என்பவரின் வீட்டைச் சோதனை யிடடபோது, அங்கு எஸ்.எல்.ஆர் ரகத் துப்பாக்கி ஒன்றும், அதற்கான ரவை கள் 6 மற்றும் ரவைக்கூடு ஆகிய னவும் கைப்பற்றப்பட்டன. இந்தப் பிரதேசத்தில் இடம்பெற்ற கொலை களின் சூத்திரதாரி இவரே எனத் தெரிவிக்கப்படுகிறது.

# தமிழர் ஆசிரியர் சங்கத்தினரை சந்திக்க வருமாறு அழைப்பு!

தமிழ் ஆசிரியர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய புதிய ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவேண்டும். ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள நிலுவைகள் மற்றும் அதிபர்களின் பதவி உயர்வுகள் வழங்கப்பட வேண்டும் போன்ற 15 கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தால், கல்வி அமைச்சின் செயலாளர் தாரா -.டி மெல்லுக்கு கடந்த ஏழாம் திகதி கடிதம் அனுப்பப்பட்டது.

இவ்வாறு தம்மால் முன்வைக்கப்பட்ட இந்தக் கோரிக்கைகள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்றப்படாவிட்டால், தாம் தொழிற்சங்கப் போராட்டததில் ஈடுபடப்போவதாகத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகளை இன்று சந்திப்பதற்கு கல்வியமைச்சின் செயலாளர் தாரா .டி மெல் தயாராக உள்ளதாக தமிழர் ஆசிரியர் சங்கத்தினருக்கு நேற்று அறிவித்துள்ளார்.

எனவே இன்று கொழும்பிலுள்ள கல்வியமைச்சில் - காலை 10 மணி முதல் இடம்பெறவுள்ள இந்தச் சந்திப்பில் கலந்து கொள்வதற்காக தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் நாளை காலை கொழும்புக்கு செல்லவுள்ளனர். (04, 10)

# இலங்கையிலுள்ள பெரும்பாலான மக்கள் அரசியல் அறிவற்ற நிலையில் உள்ளனர்

## ஜேர்மனியில் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி

(கொழும்பு)

ஜனநாயக அரசியலைப்பற்றி இலங்கையில் வாழ் கின்ற பெரும்பாலான மக்கள் அறிந்து கொள்ளாமலே வாழ்கின்றனர் என ஜேர்மன் நாட்டின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கலாநிதி கறோலா ஸ்ரீன் தெரிவித் தார்.

யாழ். தொழில் நுட்பக்கல்லூரியில் ஜேர்மன் அரசாங் கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள அரசியல் டிப்ளோ மாக் கற்கை நெறிக்கான ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு, ஊடகவியலாளர்களைச் சந்தித்த போதே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது.

இலங்கையில் வாழும் மக்களில் பெரும்பாலான மக் கள் அரசியல் பற்றிய அறிவு இல்லாதவர்களாக இருக் கின்றனர். இதுவே இலங்கையில் அரசியல் பிரச்சினை கள் நீண்டு செல்வதற்குக்கூடக் காரணமாக உள்ளது. பெரும்பாலான அடிமட்ட மக்கள் ஜனநாயகமென்றாலே என்னவெனத் தெரியாத நிலையில் உள்ளனர்.

இத்தகைய நிலையை மாற்றியமைத்து, அரசியல் அறிவை வளர்ப்பதற்காகவே நாம் அரசியல் அறிவு சார்ந்த கற்கை நெறிகளைப் பெரும்பாலான ஆசிய நாடுகளில் கற்பித்து வருகின்றோம். கொழும்பில் சிங்கள மொழி மூலக கற்கைநெறி இடம் பெறுகிறது. அதேபோல், யாழ்ப் பாணத்தில் தமிழ்மொழிமூல அரசியல் டிப்ளோமாக் கற்கை நெறியை ஆரம்பித்துள்ளோம்.

இது இரு வகையானது. ஒன்று - க.பொ.த உயர் தரத்தில் சித்தியடைந்தோர்க்கானது. மற்றையது - பட்டப் படிப்பை முடித்தோர்க்கானது இரண்டிலும் பலர் தற்போது இணைக்கப்பட்டுள்ளனர். இந்தக்கற்கைநெறி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு அரசியல் அறிவு வளர்த் தெடுக்கப்படவுள்ளது.

நாம் ஜனநாயகக் கருத்துக்களுக்கு மதிப்பளித்து சர்வதேச ரீதியில் அதற்காகப் பாடுபடுகிறோம் என அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

# கனடாவில் ஞாயிறன்று நடைபெற்ற நினைவெழுச்சிநாள் நிகழ்வில் சில காட்சிகள்








# ஜப்பான் ஓபன் ரெனிஸ்; செக் வீரர் சம்பியன்!



(ரோக்கியோ)

ஜப்பான் ஓபன் ரெனிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் செக் குடியரசை சேர்ந்த ஜிரிநோவாக் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

ஜப்பான் தலைநகரான ரோக்கியோவில் இறுதிப்போட்டி கடந்த 10 ஆம் திகதி நடந்தது. இதில் பட்டத்தைக் கைப்பற்ற செக் வீரர் நோவாக்கும், அமெரிக்க வீரர் ரெய்லர் டென்டும் மோதினர்.

செக் வீரரான நோவாக் அரையிறுதியில் முன்னாள் உலக முதல் நிலை வீரரும், 2002 ஆம் ஆண்டு விம்பிள்டன் சம்பியனுமான அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த லெய்டன் ஹெவிட்டை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றார்.

இறுதிப்போட்டியில் 5 ஆம் நிலை வீரரான நோவாக் 5-7, 6-1, 6-3 என்ற கணக்கில் அமெரிக்க வீரர் ரெய்லரை வீழ்த்தி பட்டம் வென்றார்.

முன்னாக முதல் சுற்றில் 15-40 என்ற கணக்கில் இருந்தபோது, டென்ட் இரண்டு முறை இரட்டைத் தவறைச் செய்தார். 2 ஆவது மற்றும், 7 ஆவது ஆட்டத்தில் நோவாக்கின் சேர்விசை முறியடித்தார்.

பின்பு நோவாக் தன் பங்கிற்கு 5-6 என்ற கணக்கிலும், 15-40 என்ற கணக்கில் இருந்தபோதிலும் இரட்டைத் தவறுகளைப் புரிந்தார். இதனால் அமெரிக்க வீரர் ரெய்லர் 7-5 என்ற கணக்கில் முதல் செட்டை வென்றார்.

இரண்டாவது செட்டில் நோவாக்கின் ஆட்டம் சிறப்பாக இருந்தது. இவரது மின்னல்வேக ஆட்டத்திற்கு ரெய்லரால் ஈடுகொடுத்து ஆடமுடியவில்லை. எனவே, அவர் அடிக்கடி தவறுகளைப் புரிந்தார். பின்பு நோவாக் 6-1 என்ற கணக்கில் 2 ஆவது செட்டைக் கைப்பற்றினார்.

பின்பு வெற்றியைத் தீர்மானிக்கக்கூடிய மூன்றாவது செட்டில் ரெய்லர் சிறிது தாக்குப்பிடித்து ஆடிய போதிலும், நோவாக்கின் முன்னேற்றத்தைத் தடுக்கமுடியவில்லை. 4 ஆவது ஆட்டத்தில் மட்டும் ரெய்லர் நோவாக்கின் சேர்விசை முறியடித்து புள்ளிகள் பெற்றார். பின்னர் நோவாக் தொடர்ந்து நன்கு ஆடி 6-3 என்ற கணக்கில் 3 ஆவது செட்டை வென்றார்.

கடந்த வருடம் கஸ்டாட் நகரில் நடந்த போட்டியில் நோவாக் பட்டம் வென்றார். அதன் பிறகு நீண்ட நாட்களின் பின் அவர் பெறும் முதலாவது பட்டம் இதுவாகும்.

1996 ஆம் ஆண்டு ஒக்லண்ட் போட்டியின் மூலம் தனது முதலாவது பட்டத்தை வென்றார். பின்பு கடின ஆடுகளத்தில் அவர் பெறும் பட்டம் இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது உலக தரப்பட்டியலில் 28 ஆவது நிலை வீரராக இருக்கும் நோவாக், கடந்த 2 வருடங்களுக்கு முன்பு தான் பிடித்த 5 ஆவது இடத்திற்கு முன்னேற குறி வைத்திருக்கிறார்.

# பாக்ரெல் இறுதிப்போட்டியில் இலங்கை-பாகிஸ்தான் அணிகள்

பாக்ரெல் முக்கோண ஒருநாள் கிரிக்கெட் இறுதியாட்டத்தில் எதிர் வரும் 16 ஆம் திகதி இலங்கை - பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ளன.

சிம்பாப்வே, பாகிஸ்தான், இலங்கை அணிகள் பங்குகொண்ட இந்தப் போட்டித் தொடரில் 16 புள்ளிகளைப் பெற்ற பாகிஸ்தான் ஏற்கனவே இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியிருந்தது.

நேற்றுமுன்தினம் சிம்பாப்வே - இலங்கை அணிகளுக்கிடையிலான போட்டி கைவிடப்பட்டதால் 10 புள்ளிகளுடன் இருந்த இலங்கை அணி இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியது.

எனினும், நாளை இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் இறுதி லீக் போட்டி நடைபெறும். இதன்பின்னர் 16 ஆம் திகதி இந்த இரு அணிகளுக்கும் இடையிலான இறுதிப்போட்டி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹொக்கி சம்பியன் போட்டி அவுஸ்ரேலிய அணி விலகல்

பாகிஸ்தானில் நடைபெறவுள்ள சம்பியன் கிண்ண ஹொக்கி போட்டியிலிருந்து அவுஸ்ரேலிய அணி விலகியுள்ளது.

சம்பியன் கிண்ண ஹொக்கி போட்டி பாகிஸ்தானில் டிசம்பர் 4 ஆம் திகதிமுதல் 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதில் ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் முதல் 6 இடங்களைப் பிடித்த அவுஸ்ரேலியா, ஹொலண்ட், ஜேர்மனி நியூஸிலாந்து, பாகிஸ்தான், ஸ்பெயின் ஆகிய 6 நாடுகள் பங்கேற்கத் தகுதிபெற்றன.

இந்த நிலையில் பாதுகாப்பைக் காரணங்காட்டி ஒலிம்பிக் சம்பியன் அவுஸ்ரேலிய அணி இந்தப் போட்டியிலிருந்து விலகியுள்ளது. இதனை பாகிஸ்தான் ஹொக்கி சம்மேளன செயலாளர் முசாரத்துல்லாகான் தெரிவித்தார்.

அவுஸ்ரேலிய அணி விலகியிருப்பதால் 7 ஆவது இடம்பெற்ற இந்திய அணிக்கு இந்தப் போட்டியில் ஆட வாய்ப்புக் கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பாகிஸ்தான் அணியில் மீளவும் மொயின்கான்!

(இஸ்லாமாபாத்)



பாகிஸ்தான் அணியின் விக்கெட் காப்பாளர் மொயின்கான் மீண்டும் பாக்ரெல் போட்டித்தொடரில் பங்கேற்கும் அணியில் இணைந்துகொண்டிருக்கிறார்.

வைரஸ் காய்ச்சல் மற்றும் மார்புத் தொற்றுக்குள்ளான மொயின்கான், பாக்ரெல் தொடருக்கான பாகிஸ்தான் அணியிலிருந்து விலகியிருந்தார். நோய் குணமடைந்த நிலையிலேயே மொயின்கான் மீளவும் அணியில் இணைந்துள்ளார்.

33 வயதான இவர் 217 ஒருநாள் மற்றும் 68 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். கடந்த இரண்டு போட்டிகளில் சுகவீனம் காரணமாக விளையாடவில்லை.

மொயின்கான் பூரண சுகமடைந்து தனது அணியுடன் இணைந்து பயிற்சியில் ஈடுபட்டு வருவதாக, பாகிஸ்தான் அணி முகாமையாளரான ஹரூன் ரஷூத் தெரிவித்தார்.

# குண்டெறிதலில் முதலிடம் பெற்ற தர்சினிக்கு கௌரவிப்பு விழா!



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் தேசிய மட்டத்தில் நடைபெற்ற குண்டெறிதல் போட்டியில் பங்குகொண்டு முதலிடம் பெற்ற யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மாணவி குணரத்தினம் தர்சினியை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று பாடசாலை ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் வி.மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற இநத நிகழ்வில், வாழ்த்துரைகளை நல்லூர் கோட்டக்கல்வி அதிகாரி திருமதி காங்கேயன், பாடசாலையின் பழையமாணவர் சங்கத்தலைவர் கே.சிவஞானம், உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் த.அருணகிரிராஜா, யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம் பரிதி, யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் ஆகியோர் வழங்கினர்.

தொடர்ந்து மாணவிக்கு வெற்றிக் கிண்ணங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், மாணவியின் வெற்றிக்காக உழைத்த அவரது பெற்றோர்களான குணரத்தினம் பவளம், பயிற்றுனர்களான மா.கிருபாகரன், செ.ரமணன் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வின் வரவேற்புரையை பாடசாலையின் விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியர் சே.தர்மராஜாவும் நன்றியுரையை பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் சொ.மன்மதராஜலிங்கமும் நிகழ்த்தினர். (ப)



# யாழ். மாவட்ட பாடசாலைகளிடையே வருடாந்த ஸ்கிறபிள் சுற்றுப்போட்டி!

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரி ஸ்கிறபிள் கழகம், சிறிலங்கா ஸ்கிறபிள் லீக்குடன் இணைந்து நடத்திய முதலாவது யாழ்.மாவட்ட வருடாந்த பாடசாலைகளுக்கிடையிலான ஸ்கிறபிள் சுற்றுப்போட்டி கடந்த 7 ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் யாழ். இந்துக்கல்லூரி மாணவர்களான வி.மயூரன் மாவட்ட பாடசாலைகளில் சிறந்த ஸ்கிறபிள் வீரர் விருதையும், மேற்பிரிவில் முத்லாம் இடத்தை க.விக்னன், 2 ஆம் இடத்தை அ.அல்பேட் நிமலனும் பெற்றனர்.

கீழ்ப்பிரிவில் இந்துக்கல்லூரி மாணவர்களான ஞா.வைகுந்தன் முதலாம் இடத்தையும், பா.சேகரன் 2 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

பாடசாலை ரீதியாக யாழ். இந்துக்கல்லூரி முதல் இடத்தையும், புனித பத்திரிசியார் கல்லூரி இரண்டாமிடத்தையும் வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை, யாழ்ப்பாணக்கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி என்பன முறையே 3,4,5 ஆம் இடங்களையும் பெற்றன. வெற்றி பெற்றவர்களுக்கான பரிசிற்கிண்ணங்களை யாழகம் உரிமையாளர் வழங்கியிருந்தார்.

இந்த நிகழ்வில் பிரதம தீர்ப்பாளராக சிறிலங்கா ஸ்கிறபிள் லீக்கின் பாடசாலைகளுக்கிடையிலான சுற்றுப்போட்டிகளின் பொறுப்பாளரும், வைத்திய ஆலோசனை நிபுணருமாகிய எல்.எம்.அமரசிங்க கலந்துகொண்டார். அன்றையதினம் யாழ்.இந்துக்கல்லூரியின் **'jaffna scrabbler'** என்ற ஈராண்டு இதழின் முதற் பாகம் வெளியிடப்பட்டது.



நாளை சென்னையில் ஆரம்பமாகவுள்ள இரண்டாவது டெஸ்ட் போட்டிக்காக பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் அவுஸ்ரேலிய, இந்திய அணியினர்.

# சங்கானை கோட்டமட்டத்திலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி!

அமரர் சந்திரராசா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டப் போட்டி, சங்கானை கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெறவுள்ளது.

இன்று பி.ப. 2.30 மணிக்கு வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டியில் பின்வரும் பாடசாலைகள் பங்குபற்றவுள்ளதாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சண்முகசுந்தரம் தெரிவித்தார்.

**ஆண்கள்**
**(14 வயதின் கீழ்)**

அராலி சரஸ்வதி ம.வி எதிர் சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தி, சங்கானை சிவப்பிரகாச ம.வி எதிர் விக்ரோறியா கல்லூரி, அராலி சரஸ்வதி ம.வி எதிர் வட்டு. இந்துக்கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச ம.வி எதிர் வட்டு. மத்தியகல்லூரி, சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தி எதிர் வட்டு. இந்துக்கல்லூரி, விக்ரோறியா கல்லூரி எதிர் வட்டு. மத்தியகல்லூரி

**பெண்கள்**
**(14 வயதின் கீழ்)**

அராலி கிழக்கு அ.மி.த.க எதிர் சங்கானை சிவப்பிரகாச ம.வி, அராலி சரஸ்வதி ம.வி எதிர் சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தி, அராலி சரஸ்வதி ம.வி. எதிர் விக்ரோறியா கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச ம.வி எதிர் வட்டு. மத்தியகல்லூரி, அராலி கிழக்கு அ.மி.த.க எதிர் வட்டு மத்திய கல்லூரி, விக்ரோறியா கல்லூரி எதிர் சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தி.

நாளை அரையிறுதிப் போட்டிகளும், 3 ஆம் இடத்திற்கான போட்டியும் நடைபெற்று, இறுதிப்போட்டி அரையிறுதி 1 இல் வெற்றி பெற்றவர்களுக்கும், அரையிறுதி 2 இல் வெற்றிபெற்றவர்களுக்கும் இடையில் நடைபெறவுள்ளது. போட்டி 'றலி' முறையில் 3 சுற்றுக்கள் கொண்டதாக நடைபெறவுள்ளன. (48)

44) இலங்கையில் மிக உயர்ந்த நீர்வீழ்ச்சி
1) பம்பரகந்த 2) துன்கிந்த 3) தியலும 4) மகாவலி

45) இலங்கையின் தேசியப்பறவை
1) புறா 2) மயில் 3) காட்டுக்கோழி 4) கழுகு

46) இலங்கைக்கு சொந்தமான தாவரங்களின் தொகை
1) 1467 2) 09 3) 830 4) 68

47) எமது நாட்டுக்குச் சொந்தம் அல்லாத தாவரம்
1) ஆம்பல் 2) அரசை 3) இலுப்பை 4) சடச்சி

48) பூச்சிகளைப் பிடித்து உணவாக உட்கொள்ளும் செடி
1) கிளிச்சாடிச் செடி 2) ஆமணக்கு 3) துளசி 4) அல்லி

49) எமது நாட்டிற்கு சொந்தமல்லாத பறவை
1) காளான் கோழி 2) புளுணி 3) நாகணவாய் 4) மயில்

50) எமது நாட்டிற்கு சொந்தமல்லாத முலையூட்டி
1) ஆடு 2) அழுங்கு 3) கருங்குரங்கு 4) மூஞ்சூறு

51) சிலோன் டி.ரீ.நிமல சிலோன் பாட்விஸ் என்பன இலங்கைக்குச் சொந்தமான
1) தாவரங்கள் 2) வண்ணாத்திப்பூச்சிகள்
3) விமானங்கள் 4) மிருகங்கள்

52) பூமிக்கு அண்மையிலுள்ள கோள்
1) சுக்கிரன் 2) செவ்வாய் 3) புதன் 4) சனி

53) ஒவ்வொரு வருடமும் சிறுவர் தினம் கொண்டாடப்படும் திகதி
1) ஜனவரி 01 2) ஒக்ரோபர் 01 3) ஓகஸ்ட் 01 4) பெப்ரவரி 04

54) சம பார தராசுப் படமூலம் வெளிப்படுத்தும் கருத்து
1) நீதி 2) சமாதானம் 3) ஒற்றுமை 4) துக்கம்

55) பின்வரும் படங்களில் பெயர்களைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.


..................


..................


..................


..................


..................


..................


..................


..................


..................


..................

◆ கந்தனுடைய கடையின் விலைப்பட்டியலை அவதானித்து 71 தொடக்கம் 76 வரையுள்ள வினாக்களுக்க விடை தருக.

| பொருள் | அளவு | அளவு | |
|---|---|---|---|
| | | ரூபா | சதம் |
| சீனி | 1 kg | 32 | 00 |
| தேயிலை | 750 g | 60 | 00 |
| சீலை | 5 m | 200 | 00 |
| எண்ணெய் | 600 ml | 36 | 00 |
| கொப்பி | 1 டசின் | 126 | 00 |
| புத்தகப்பை | 5 | 520 | 00 |

56) 875 g சீனியின் விலை யாது?
..................

57) 500 g தேயிலையின் விலை யாது?
..................

58) 25 cm சீலையின் விலை எது?
..................

59) 1 l எண்ணெயின் விலை யாது?
..................

60) 5 கொப்பியின் விலை யாது?
..................

61) 4 புத்தகப்பையின் விலை யாது?
..................

(62) A,B,C எனும் 3 மாணவர்கள் மாதாந்தம் செலவுக்குக் கிடைத்த பணத்தில் உண்டியலில் சேமித்ததைப் படம் காட்டுகிறது.




A .................. B ..................
C ..................

63) இதன்படி A,B,C எனும் ஒவ்வொருவருக்கும் செலவுக்குக் கிடைத்த மாதாந்தப் பணம் எவ்வளவு? பின்னத்தை தசமத்துக்கு சமவலுப்பின்னம், தசமத்தைப் பின்னத்துக்கு மாற்றுதல், பின்னம் சுருக்குதல் போன்ற அறிவைப் பயன்படுத்தி சரியான தொடர்பை இனங்கண்டு A பகுதியுடன் B பகுதியை தொடுக்க.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3.2 | $7\frac{5}{10}$ | 7.7 | 8.3 | $\frac{1}{3}$ | $6\frac{1}{10}$ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| $7\frac{7}{10}$ | $8\frac{3}{10}$ | $3\frac{2}{10}$ | $7\frac{1}{2}$ | 6.1 | $\frac{2}{6}$ |

64 நியம நேரத்தை சாதாரண நேரத்திற்கும் சாதாரண நேரத்தை நியம நேரத்திற்கும் எழுதி வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.

| நியமநேரம் | பி.ப 3.45 | ........... |
|---|---|---|
| சாதாரண நேரம் | ............ | 08:45 மணி |

K.T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்

இங்கே மடிக்கவும்





# மாணவர் மலர்

## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004

1) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
i) 53270 இல் இலக்கம் மூன்றின் பெறுமதி யாது?
..................
ii) ஒரு தேக்கரண்டியின் கொள்ளளவு யாது?
..................
iii) 40 கொய்யாப்பழங்களில் 5/8 பழுதடைந்தன. பழுதடையாத கொய்யாப்பழங்கள் எத்தனை?
..................
iv) 214 பயிற்சிப் புத்தகங்கள் உள்ளன. ஒரு பிள்ளைக்கு 7 வீதம், எத்தனை பிள்ளைகளுக்குக் கொடுக்க முடியும்.?
..................
மீதியாக உள்ள பயிற்சிப் புத்தகங்கள் எத்தனை? ..................
v) மயூரனின் நிறை 22 கிலோகிராம் 250 கிராம் ஆகும். கண்ணனின் நிறை 20 கிலோ கிராம் 650 கிராம் ஆகும். கண்ணனைவிட மயூரன் எத்தனை கிலோகிராம் நிறைகூட உள்ளான்? ..................
vi) மு.ப 7.25 ஐ நியம நேரத்தில் எழுதுக. ..................
vii) 1,3,6,10,15,......, 28, ..... இவ்வெண்கோலத்தில் வெற்றிடத்தில் வரவேண்டிய எண்கள் எவை? ..................
viii) எனது கடிகாரம் 10 நிமிடம் முந்தி ஓடியது. நான் பிந்தி ஓடியதாக நினைத்தேன். என் கடிகாரம் 8.25 காட்டினால், அதன் சரியான நேரம் யாது? ..................
ix) ஓர் எண்ணை 3 ஆல் பெருக்கி, அதனுடன் 3 ஐக் கூட்ட, அவ்வெண் 15 ஆகியது. அவ்வெண்யாது? ..................
x) 10 m நீளமான நாடாவை ஒருவருக்கு 50 cm வீதம், எத்தனை பேருக்கு வெட்டிக் கொடுக்கலாம்? ..................

2) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் 'சரி' எனவும் பிழையாயின் 'பிழை' எனவும் எழுதுக.
i) யாருக்கும் இல்லை என்று சொல்லாது கொடுக்கும் தன்மை வாய்ந்தவன் உலோபி ஆவான். (.........)
ii) என்பது ஒரு துளை கருவியாகும். (.........)
iii) நத்தை பகைவரிடமிருந்து தன்மைக்காப்பாற்ற, தனது உடலை ஓட்டினுள் இழுக்காது. (.........)
iv) கப்பி ஓர் இலகு பொறியாகும். (.........)
v) காற்றால் பரம்பலடையும் வித்துக்கள் பாரமற்றவை. (.........)
vi) இலையானுக்கு ஆறு கால்கள் உண்டு. (.........)
vii) அ.ப என்னும் சுருக்கக் குறியீடு, அவன் பணிந்தான் என்பதைக் குறிக்கிறது. (.........)
viii) தென்னையின் இளங்காய் குரும்பை என்பது போல பனையின் இளங்காய் நுங்கு அன்று. (.........)
ix) 1/2 ஐக் குறிக்கும் தசம எண் 7 ஆகும். (.........)
x) இப்படம் கூர்ங்கோணத்தைக் காட்டுகிறது. (.........)

3. சரியான விடையைத் தெரிவு செய்து வெற்றிடத்தை நிரப்புக.
(பல்லி, தர்மசக்கரம், தொங்கு வேர், சிலப்பு, உண்ணும், சிறுநூலோடி, தூக்குக்குண்டு, நீலம், பாதுகாப்பான, பருந்து, இஸ்லாம்)
i) .................. தாவரத்தை நடுவதற்கு நீரையும், கனிப்பொருளையும் பெறுவதற்கு உதவுகிறது.
i) கரட் பச்சையாக .................. உணவாகும்.
ii) வீட்டில் வாழும் .................. மாமிச உண்ணியாகும்.
iv) கிளியின் சொண்டு .................. நிறமுடையது.
v) மேசன் தொழிலாளி .................. தனது கருவியாகப் பயன்படுத்துகிறான்.

vi) ◯ என்னும் குறியீடு .................. சமயத்தவர்களுக்குரியது.
vii) அரச இலச்சினையின் மேல் .................. உள்ளது.
viii) பெரிய நகரங்களில் வீதியைக் கடப்பதற்கு .................. பாலத்தை அமைத்துள்ளனர்.
ix) என்பது .................. புகையிரதக்கடவை ஆகும்.
x) பாவாடையைச் சுருக்குவதற்கு .................. தையல் பயன்படும்.

4. பின்வரும் படத்தைப் பார்த்துவிடை தருக.
i)

இந்தப் படத்திலுள்ள கருவியின் பெயரென்ன?
..................
ii) இதனை ஆக்குவதற்குத் தேவையான பொருட்கள் எவை?
1. ..................
2. ..................
3. ..................
4. ..................
5. ..................
iii) இக்கருவியை நாம் எதற்குப் பயன்படுத்துகிறோம்?
..................

5. சுருக்கமான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.
i) தையல் ஊசி துருப்பிடிக்காது இருக்க, யாது செய்யலாம்?
..................
ii) 2 ஆவது உலக இந்துசமய மாநாடு எப்போது கொழும்பில் நடைபெற்றது? ..................
iii) தற்போதைய பாடசாலைக் கல்வி அமைச்சரின் பெயரென்ன?
..................
iv) அலங்காரத் தையல் தைப்பதன் நோக்கம் யாது?
..................
v) வலைப்பந்துக் குழுவில் எத்தனை பேர் அங்கம் வகிப்பர்?
..................
vi)  இது எவ்வகை நடையைக் குறிக்கும்?
..................
viii)  இவ் வீதிச் சமிஞ்ஞை எதனைக் காட்டுகிறது?
..................
ix)  இவ்விளையாட்டு உபகரணம் எவ்விளையாட்டுக்குப் பயன்படுகிறது?
..................
x) வீட்டிற்கே என்ற சொல்லின் பன்மைச் சொல்லினை எழுதுக.
..................
xi) கா,மா,ன,ய,ஆ,ம்,வி என்னும் எழுத்துக்களைக் கொண்டு ஆக்கக் கூடிய சொல் யாது?
..................

6. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் பொருளை தமிழில் எழுதுக.
i) Table ..................
ii) Peon ..................
iii) StaffRoom ..................
iv) Bakery ..................
v) Papaw ..................
vi) Thankyou ..................

8. 'நான் தொலைபேசியில் உரையாடும் போது ...... என்ற தலைப்பில் ஆறு வாக்கியங்கள் நான்கு சொற்களுக்குக் குறையாது எழுதுக?
..................

◆ கீழே தரப்படும் பந்தியை வாசித்து 1 தொடக்கம் 14 வரையுள்ள வினாக்களுக்கு பந்தியிலிருந்து விடை தருக?

நான் தன்னந்தனியே வழி தெரியாமல் நடுக்காட்டில் சென்றுகொண்டிருந்தபோது தூரத்தில் சரசரவென ஓர் சத்தம் கேட்டது. சுற்றும் முற்றும் திரும்பிப் பார்த்தேன். அப்போது விமானம் ஒன்று என்னை நோக்கி வருவதைப் போன்ற ஒரு 'கறுத்தச் சிங்கம்' என்மேல் பாய்ந்தது. நான் அம்மா என அலறிக்கொண்டு எழுந்தேன். அப்போதுதான் நான் கண்டது கனவு என எனக்குப் புரிந்தது.

◆ பின்வரும் சொற்களுக்கான ஒத்த கருத்துச் சொல் தருக?

1) சீயம் ........................ 2) வனம் ........................

3) பாதை ................ 4) அரவம் ....................

◆ பின்வரும் சொற்களுக்கான எதிர்ச்சொற்களைத் தருக?

5) தூங்கினேன் .................... நினைவு ........................

6) பந்தியிலுள்ள உயர்திணை, பெண்பால், ஒருமை, படர்க்கை உள்ள ஒரு சொல் எது? ..........................................

7) ஒரு கறுத்தச் சிங்கம் என்பதன் பன்மை வாக்கியத்தை எழுதுக?

..............................................................

8) இந்தப் பந்தியிலிருந்து இணைமொழி ஒன்று தருக?

..............................................................

9) சிங்கத்துக்குக் கொடுக்கப்பட்ட அடைமொழி யாது?

..............................................................

10) சிங்கத்துக்குக் கொடுக்கப்பட்ட உவமானம் யாது?

..............................................................

11) தன்னந்தனியே என்ற சொல்லின் சரியான வடிவத்தைத் தெரிந்து கீறிடுக. (இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர், அடுக்கிடுக்குத் தொடர்)

..............................................................

12) இரட்டைக்கிளவி ஒலிக்குறிப்பினால் ஏற்பட்டது எது?

..............................................................

13) "6" இக்குறியின் பெயர் யாது?

..............................................................

14) இப்பந்தியிலுள்ள பெயரெச்சச் சொல்லாக வரக்கூடியது எது? (சத்தம், கறுத்த, காடு)

..............................................................

◆ பின்வரும் ஆங்கிலச் சொல்லுக்கான கருத்தை தமிழில் தருக?

15) LION ................................ 16) JUMPING ........................

17) JUNGLE ............................ 18) HUNGRY ..........................

பின்வரும் சொற்களுக்கான ஆங்கிலச் சொல்லை (ஆங்கிலத்தில்) எழுதுக.

19) என்னுடைய ........................ 20) 30 ........................

21) கறுப்பு ................................

◆ பின்வரும் தமிழ்ச் சொற்களுக்கான சிங்களச் சொல்லை (சிங்கள எழுத்தில்) எழுதுக.

22) ஒன்று .................... 23) தம்பி ........................

24) நீர் ........................

◆ தரப்படும் சொற்கள் ஒரு கடித முகப்பில் எவ்விடத்தில் இடம் பெற வேண்டுமெனத் தீர்மானித்து அச்சொல்லின் ஆங்கில முதல் எழுத்தை உரிய முகப்பில் எழுதுக.

A - முத்திரை B -(From - இருந்து) சதீஸ், அம்பாறை
C - (To - க்கு) நஸீர் கல்முனை D - பதிவுத் தபால்
E - தபாற் கந்தோர்



பின்வரும் சுருக்கக் குறியீட்டின் விரிவைத் தருக?

25) 1) தே.க.நி ........................................

2) மா.ந.ச ........................................

◆ பின்வரும் ஆங்கிலக் குறியீட்டின் விரிவை தமிழில் தருக?

1) P.T.O ........................ 2) G.S ........................

◆ கீழ்வரும் 26-38 வரையுள்ள கூற்றுக்கள் சரியாயின் அடைப்புக்குள் "T" அடையாளமும் பிழையாயின் "F" அடையாளமிடுக.

26) அண்மையில் செவ்வாய் கிரகம் பூமிக்கு அருகில் காட்சியளித்தது ( )

27) இலங்கை வங்கி பணத்தை அச்சிட்டு வெளியிடும். ( )

28) காந்தத்தில் ஒத்த முனைகள் இரண்டும் கவரும். ( )

29) மஞ்சள், நீலம், பச்சை அடிப்படை வர்ணங்களாகும். ( )

30) வேலையை இலகுவாக்குவதற்கு இயந்திரங்களில் பற் சில்லுகள் பயன்படுத்தப்படும். ( )

31) நிறச்சாயத் துளிகளை ஊதுவதன் மூலம் பல்வேறு அலங்காரங்களின் கோல ஆக்கங்களை உருவாக்கலாம். ( )

32) 'கிரிகொர நடனம்' வேடுவர்களின் வழிபாட்டு நடனமாகும் ( )

33) தலதாமாளிகை அமைந்துள்ள இடம் திருகோணமலையாகும். ( )

34) தேசிய கீதம் பாடும்போது கால்கள் "V" வடிவில் இருத்தல் வேண்டும். ( )

35) டெங்கு நுளம்பு அசுத்தமான நீரில் முட்டையிடும். ( )

36) "ஈ.மெயில" இல் உருவப்படங்களை அனுப்ப முடியாது ( )

37) வித்துக்களைப் பயன்படுத்தி அல்பனா ஆக்கம் செய்யலாம். ( )

38) மரத்தவளை தேரை ஈருடகப் பிராணியாகும். ( )

வினாவிற்குச் சரியான விடையின் கீழ் கீறிடுக.



39) இரும்புக் கோலில் மெழுகினால் குண்டுசகளைப் படத்தில் உள்ளவாறு ஒட்டி மெழுகுதிரியில் பிடித்தால் இப்பரிசோதனையால் உணர்வது

1) ஒளி நேர்கோட்டில் செல்லும் 2) வெப்பக் கடத்தல்

3) எரிதலுக்கு வளியின் தேவை அறிதல்

4) வெளிச்சத்தை அறிதல்

40) அருகில் உள்ள பூவில் கீழ்வரும் பகுதிகளை எழுதுக.




A .................... B....................
C .................... D ..................
E ....................



41) உருவின் படி காற்று வீசும் திசை

1) வடக்கிலிருந்து தெற்கு

2) கிழக்கிலிருந்து மேற்கு

3) மேற்கிலிருந்து கிழக்கு

42) ஒரு மாணவன் கண்ணாடிக் குடுவையில் சிறிதளவு மண்ணை இட்டு வெப்பமாக்கினான். இப்பரிசோதனையில் அவன் அறிவது

1) மண்ணின் வளியை

2) மண்ணின் நீரை

3) மண்ணின் கனியுப்பை

4) வெப்பத்தை




43) ஈட்ஸ், ஈகிப்ட்ஸ், ஈட்ஸ் என்போரிக்கடஸ் எனும் இருவகை பெண்நுளம்புகளால் ஏற்படும் நோய்

1) டெங்கு 2) மலேரியா

3) மூளைக்காய்ச்சல் 4) எயிட்ஸ்

இங்கே மடிக்கவும்



# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை -2004

## கணிதம் II

01)

a) வியாபாரி ஒருவன் பொருள் ஒன்றை ரூபா 7000 இற்கு வாங்கி 20% இலாபம் வைத்து விலை குறிக்கின்றான். உடன் காசுக்கு விற்கும் போது குறித்த விலையில் 10% கழிவு கொடுத்து விற்கின்றான்.

1) பொருளின் குறித்த விலை யாது? ..........................

2) வழங்கப்பட்ட கழிவு எவ்வளவு? ..........................

3) கழிவுடன் பொருளை விற்ற விலை யாது? ..................

4) வியாபாரி அடையும் சதவீத இலாபம் எவ்வளவு? ..............

b)




PQRS என்னும் செவ்வக அட்டை ஒன்றில் இருந்து QR ஐ விட்டமாகக் கொண்ட அரைவட்ட பகுதி வெட்டி அகற்றப்பட்டது. இங்கு PQ = 46 cm, PS = 28 cm ஆகும். மீதி அட்டையின்,

1) சுற்றளவு,

2) பரப்பளவு, என்பவற்றைக் கணிக்க.

C) 3, 7, 11, ..... தொடரின்

1) 9ம் உறுப்பைக் காண்க. ..........................

2) முதல் 19 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க....

D) உருவில் AX=AY, DX=DY ஆகும்.




1) $\triangle AXD \equiv AYD$ என நிறுவுக.

2) ADX ற்குச் சமனான கோணம் எது?

3) XY யை இணைக்க. XY யும் AD யும் இடைவெட்டும் புள்ளியை 0 எனக் குறிக்க.

4) $\widehat{XOD}$ இன் பருமன் யாது? (காரணம் தருக)

E) கணித வினா ஒன்றிற்கு விடையளிப்பதற்கு 11 மாணவர் எடுத்த நேரத்தை (நிமிடத்தில்) பின்வரும் தகவல்கள் குறிக்கின்றன.

15, 33, 29, 28, 31, 17, 26, 22,26

பின்வருவனவற்றைக் காண்க.

1) ஆகார பெறுமானம்

2) முதலாம் காலணை

3) இடையம்

4) மூன்றாம் காலணை

f) பின்வரும் வென்னுருவைப் பயன்படுத்தி கீழேயுள்ள வினாக்களுக்கு விடை தருக.




1) தொடை A யை மூலகங்களுடன் தருக.

2) தொடை B யை மூலகங்களுடன் தருக.

3) I (C) யைக் காண்க.

4) AI B யை தருக.

5) அகிலத் தொடை (ℰ) இல் இருந்து எழுமாறாக மூலகம் ஒன்றைத் தெரிவு செய்தால், அது சதுர எண்ணாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

02) ஒருவன் மோட்டார் சைக்கிள் ஒன்றை ரூபாய் 77000 இற்கு வாங்கி, ஒரு வருடத்தின் பின் விற்கிறான். வாங்கிய விலைக்கும், விற்றவிலைக்கும் உள்ள விகிதம் 7:8 ஆகும்.

1. விற்ற விலை யாது?

2. இலாபம் எவ்வளவு?

3. சதவீத இலாபம் எவ்வளவு?

4. மோட்டார் சைக்கிளை வாங்குவதற்கான பணத்தை 10% எளிய வட்டிக்கு கடனாகப் பெற்றிருப்பின், அதற்கான வருட வட்டி எவ்வளவு?

5. மோட்டார் சைக்கிளை விற்றுப் பெற்ற பணத்தை 15% பங்கிலாபம் தரும் ரூபாய் 11 விலையுள்ள ரூபாய் 10 பங்குகளில் முதலிடின்

a) வாங்கிய பங்குகள் எத்தனை?

b) அவற்றின் பெயர் மாத்திரையான பெறுமானம் எவ்வளவு?

c) இப்பங்குகளில் அவன் பெறும் வருட வருமானம் எவ்வளவு?

03) நேர்விளிம்பு, கவராயம், cm\mm அளவிடை ஆகியவற்றை மாத்திரம் பயன்படுத்தியும், அமைப்புக் கோடுகளைத் தெளிவாகக் காட்டியும்

1) AB = 10cm, Bc = 8CM, CA = 6cm ஆகவுள்ள $\triangle ABC$ யை அமைக்க.

2) $A\hat{C}B$ யை அளந்து எழுதுக.

3) C ல் இருந்து AB இற்கான செங்குத்தை வரைக.

4) அக்கோடு AB வெட்டும் புள்ளியை D எனக் குறிக்க.

5) CDBO என்னும் செவ்வகத்தைப் பூர்த்தி ஆக்குக.

6) CD யை C யிலும் DB யை D யிலும் தொட்டு BC யை நாணாகக் கொண்ட வட்டத்தை வரைக.

04) ரூபாய் 16000 பெறுமதியான குளிர்சாதனப் பெட்டி ஒன்றை வாடைகைக் கொள்வனவு முறையில் வாங்க முதலில் ரூபாய் 4000 செலுத்தி, மீதியை சமமான 12 மாதாந்த தவணைக்கட்டணங்களாகச் செலுத்தியும் பெற்றுக் கொள்ளலாம். இதற்காக அறவிடப்படும் வட்டி 24% ஆகும்.

1) முதல் செலுத்துகையின் பின் எஞ்சிய கடன் பணம் எவ்வளவு?

2) மாதம் ஒன்றிலே, கடன் தொகையில் செலுத்தப்படும் பணம் எவ்வளவு?

3) ஒரு மாத கடன் பணத்துக்கு செலுத்த வேண்டிய ஒரு மாத வட்டி எவ்வளவு?

4) வட்டி கணிக்கப்படும் மாத அலகுகள் எத்தனை?

5) செலுத்த வேண்டிய மொத்த வட்டி எவ்வளவு?

6) தவணைக் கட்டணம் எவ்வளவு?

05) a) பின்வரும் ஒருங்கமை சமன்பாடுகளைத் தீர்க்க

$$x + 2y = 4$$
$$2x - y = 3$$




b) (i) உருவில் காட்டப்பட்ட செங்கோண முக்கோணி ABC யின் பரப்பளவுக்கான கோவையை X இன் சார்பில் தருக.

(ii) இந்த முக்கோணியின் பரப்பளவு 20 $cm^2$ எனின், x இலான சமன்பாடு ஒன்றை அமைக்க.

(iii) அந்தச் சமன்பாட்டைத் தீர்க்க X ஐக் காண்க.

(iv) AB யைப் பக்க நீளமாகக் கொண்ட சதுரத்தின் பரப்பளவைக் காண்க.

பிறைற்மன் வெளியீடு

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஏழாவது அகவையில்



பெயர் : சி.சிவனுஜன்
முகவரி : அம்பிகை நகர், வேலணை.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :----------------------------------------

முகவரி :----------------------------------------

பிறந்த ஆண்டு:----------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------------------------
பெற்றோர் ஒப்பம்


# உலக நீர்த்தினத்தை முன்னிட்டு மாணவரிடையே கட்டுரைப்போட்டி

உலக நீர் தினம் தொடர்பாகப் பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை போட்டி நடத்தப்படவுள்ளது.

மார்ச் 22 இல் கொண்டாடப் பட்டுவரும் உலக நீர்தினத்தை முன்னிட்டு எதிர்வரும் வருடத் துக்காக நகர அபிவிருத்தி நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஏற்பாட்டில், தேசிய நீர்வழங்கல் வடிகால அமைப்புச் சபையால் அகில இலங்கை ரீதியாகப் பாடசாலை மாணவர்களிடையே போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

பாடசாலைகள் அடங்கியுள்ள பிரதேசத்தின் நீர் மூலங்களை இனம் காணுதல், நீர்க் குறைபாட்டையும் அதன் பெறுமதியையும் அறிதல், நீர்வளங்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்தல், இலங்கை எங்கும் பரந்து கிடக்கும் நீர் ஊற்று, நீர்ப்படலம், நீர்க்குமிழ், நீர்வீழ்ச்சி பற்றிய தகவல்களை அறிதலும், திரட்டுதலும் என்பன இதன் நோக்கமாகும்.

க.பொ.த.சாதாரண தரம், மற்றும் உயர்தர மாணவர்கள் தரமாகத் தமக்குள் ஒன்றிணைந்து குழுக்களாகி, "எமது பிரதேசத்தில் இருக்கின்ற நீர் ஊற்று, நீர்க்குமிழ், நீர்ப்படலம், நீர்வீழ்ச்சி பற்றிய ஆராய்ச்சி அறிக்கை'' என்ற தலைப்பிலான 'ஒரு ஆய்வு அறிக்கையைத் தயாரித்துச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

இந்த ஆய்வு அறிக்கையில் பின்வருவன உள்ளடக்கப்படுதல் வேண்டுமெனக் கோரப்பட்டிருக்கிறது. மாவட்டம், பிரதேச செயலர் பிரிவு, கிராம சேவையாளர்பிரிவு, பாடசாலைப் பெயர், நீர் ஊற்று, நீர் மூலத்தின் விபரம், இயல்பு, அது அமைந்துள்ள பகுதியின் படவரைபு, அந்த நீர் தற்போது எந்தத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது என்ற விபரங்கள் தொடர்ச்சியாக நீர்கிடைகிறதா? என்பது பற்றிய விபரம், நீர் மூலம் வற்றிப்போகும் அபாயம் உண்டா என்பதன் விபரம், அதற்கான காரணங்கள், நீர்மாசடையக் காரணிகள் உள்ளனவா? என்பது பற்றிய விபரம், நீர் மூலம் தொடர்பான விசேட குணங்கள், குறித்த நீர் மூலத்தைப் பாதுகாப்பதற்கு மாணவர் குழுக்கள் தெரிவிக்கும் குறுகியகால, நீண்டகால ஆலோசனைகள், குறித்த நீர் மூலம் தொடர்பான மக்களது கருத் துக்கள், பாடல்கள், கிராமியப் பாடல்கள், எழுத்துப் படிவங்கள் என்பன இருப்பின், அவை பற்றிய விளக்கம் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

போட்டியில் பங்கு கொள்ளும் மாணவக் குழுக்கள் - பின்வரும் விபரங்களை உள்ளடக்கிய மாதிரி விண்ணப்பத்தைத் தயாரித்து, ஆய்வறிக்கையுடன் இணைத்தனுப்ப வேண்டும். குழுத்தலைவரது பெயர், பங்குபற்றும் உறுப்பினர்களது பெயர், பாடசாலையின் பெயர், தொலை பேசி இலக்கம் போட்டிக்குழுக்கள் 2005 ஆம ஆண்டில் கல்வி பயிலும் வகுப்பு, வகுப்பாசிரியர் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவை குறிப்பிடப்பட்டு, அதிபரது ஒப்பமும், பதவி முத்திரையும் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆய்வறிக்கைகள் யாவும், அடுதத வருடம் ஜனவரி 5 ஆம் திகதிக்கு முன்பாகத் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபை, நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

மாவட்ட ரீதியில் சிறந்த அறிக்கையை சமர்ப்பிக்கும் பாடசாலைக் குழுவுக்கு, நீர் பரிசோதிக்கும் உபகரணத் தொகுதி ஒன்று பரிசாக வழங்கப்படும். அத்துடன், அனைத்து உறுப்பினர்களுக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இந்தப் போட்டி தொடர்பான மேலதிக விபரங்களை உதவிப் பொது முகாமையாளர் (வடக்கு - கிழக்கு மாகாணம்) தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை, இலக்கம் 14, ரய்பல் கிரீன் திருகோணமலை என்ற முகவரியில், அல்லது 026 - 2222028 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொண்டு பெறலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (31)

# மாணவருக்கு சமைத்த உணவு; அடுத்த வருடம் முதல் நடைமுறை

(ஆழியவளை)

யாழ்.மாவட்ட பாடசாலைகளில் தரம் 1 தொடக்கம் 9 வரையுள்ள மாணவர்களுக்கு காலை - சமைத்த உணவு வழங்கும் திட்டம் அடுத்த வருடம் முற்பகுதியிலேயே செயற்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இந்த மாவட்டத்தில் - மருதங்கேணி, சாவகச்சேரி, தெல்லிப்பளை, ஊர்காவற்றுறை ஆகிய கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இந்த ஆண்டு மூன்றாம் தவணை தொடக்கம் முதலே காலை உணவு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு முன்னோடியாக இவ்வாண்டு இரண்டாம் தவணைப் பிற்பகுதியில் இந்த நான்கு கல்விக் கோட்டங்களிலும், பாடசாலை உணவூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், கோட்டமட்டப் பயிற்சிப் பட்டறைகள் உலக உணவுத் திட்டத்தால் நடாத்தப்பட்டன.

இந்தப் பயிற்சிப்பட்டறைகளில் பிரதேச செயலர், கிராம அலுவலர்கள், கோட்டக் கல்வி அலுவலர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், பாடசாலை அபிவிருத்தி செயலாளர்கள், பொதுச் சுகாதார அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

பாடசாலைகளில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் சமயலறைகளையும் தயாரித்துள்ளனர்.

இந்தத் திட்டம் குறிப்பிட்ட காலத்தில் நடைமுறைப்படுத்தப் படாதது குறித்து, பாடசாலை சமூகம் கவலை கொண்டுள்ளது. (122)

# காங்கேசன் கடற்பரப்பில் 10 இந்திய மீனவர்கள் கைது!

காங்கேசன்துறை கடற்பரப்பில் வைத்து நேற்றுமுன்தினம் மாலை, பத்து இந்தியப் பிரஜைகள் வெடிபொருட்களுடன் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

ரோந்துசென்ற கடற்படையினர் இவர்களின் வள்ளத்தைச் சோதனையிட்டபோது, அதில் வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

அவர்கள் தாம் மீனவர் என்று கடற்படையினரிடம் தெரிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இருப்பினும் இவர்களிடம் வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால், இது பற்றி இராணுவப் புலனாய்வுத்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பிட்ட பத்துப்பேரும் காங்கேசன்துறை பொலிஸ் விசாரணையின் பின்பு, மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு, எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## பொங்கு தமிழே இசைத்தட்டு வெளியீட்டு விழா

கனடா சிலம்பம் அமைப்பினர் உருவாக்கிய அரிமா அழகனின் 'பொங்கு தமிழே' பாடல் இசைத் தட்டு வெளியீட்டு விழா, எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் நாவலர் கலராசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையில் நடைபெறவுள்ள இந்த வெளியீட்டு விழாவின் சிறப்புரையை பேராசிரியர் அ.சண்முகதாஸும், வெளியீட்டுரையை கவிஞர் புதுவை இரத்தினதுரையும் நிகழ்த்தவுள்ளனர்.

## படுகொலை நினைவுதினம்

1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 12, 13 ஆம் திகதிகளில் கொக்குவில் பகுதியில் இந்திய இராணுவத்தினரால், கோரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் 17 ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று காலை 9 மணிக்கு மாணவர் பேரவைத் தலைவர் ப.பகீரதான் தலைமையில் கொக்குவில் பிரம்படி வீதிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் நடைபெறவுள்ளது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள், கல்விமான்கள் கலந்து கொண்டு நினைவுரையாற்றவுள்ளனர்.

## சிறுவர் முதியோர் தின நிகழ்வுகள்

முதியோர், சிறுவர் தினவிழா நல்லூர் பிரதேச செயலகத்தால் சிறப்பாகக் கொண்டாடப்படவுளளது.

நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந்த விழாவில், அரச அதிபர் சிவசுவாமி பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளவுளளார்.

நல்லூர்ப் பிரதேசத்துக்குட்பட்ட அனைத்து கிராமசேவையாளர் பிரிவிலிருந்தும் முதியோர்கள் தெரிவு செய்யப்பட்டு, இந்த விழாவில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த விழாவில் சிறுவர்களுக்கான கதை, கட்டுரைப் போட்டிகளுக்கான பரிசுகள் முதியோர் விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றோடு பல கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

## நவராத்திரி பூசை

நாகேஸ்வரி அளவெட்டி தெற்கு சிறீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை தொடக்கம் நவராததிரி பூசைகள் நடைபெறவிருக்கிறது.

தினமும் விசேட அபிடேக, ஆராதனைகள் பக்தி சிரத்தையுடன் நடைபெறும். 23 ஆம் திகதி சனிக்கிழமை விஜயதசமி பூசையுடன் நவராத்திரி இரவு பூசைகள் நிறைவு பெறும். (206)

# சமயப் பழக்கங்களைப் போதித்து சிறார்கள் வளர்க்கப்பட வேண்டும்

## தென்மராட்சிப் பிரதேச செயலர்

நாளைய உலகின் தலைவர்களாக மிளிரப்போகின்ற இளஞ் சிறார்களுக்குப் பாடசாலைகள் மூலமும், அறநெறிப் பாடசாலைகள் மூலமும், ஆலயங்கள் மூலமும் அறநெறிகள், சமயப் பழக்க வழக்கங்கள் என்பன போதிக்கப்பட்டு வளர்க்கப்படல் வேண்டும்.

இளைய சமுதாயம் நல்லதோர் ஆரோக்கியமான சமுதாயமாக வளரும். இவர்கள் மேற்குறிப்பிட்ட அமைப்புக்கள் மூலமும், பெற்றோர்கள் மூலமும் பாதுகாக்கப்பட வேணடியவர்கள். இதேபோலத்தான் முதியோர்களையும் நாம் நன்கு பராமரிக்க வேண்டும். முதியோர்கள் நனகு பழுத்த அனுபவசாலிகள். நிறைந்த அறிவுடையவர்கள். அவர்களைப் பேணி, அவர்களது அறிவுரைகளைக் கேட்டு நாம் நல்லபடி வாழவேண்டும்.

இவ்வாறு தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் கடந்த செவ்வாய்க் கிழமை நடத்தப்பட்ட சர்வதேச சிறுவர்தின, முதியோர் தின விழாவுக்குத் தலைமைதாங்கி உரை நிகழ்த்திய தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் தெரிவித்தார்.

சாவகச்சேரி தென்னிந்தியத் திருச்சபைப் பாலர் பாடசாலை மண்டபத்தில் நண்பகல் 1 மணியளவில் ஆரம்பமான இவ்விழாவில், ஆசியுரையை "வேதாகம சோதிட பூஷணம்'' சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்களும், தென்னிந்தியத் திருச்சபையைச் சேர்ந்த அருட்தந்தை வசந்தகுமார் அடிகளாரும் நிகழ்த்தினர். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த ஜெயராஜ், தென்மராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.முருகதாஸ் ஆகியோர் நிகழ்த்தினர்.

நிகழ்வில் சர்வதேச சிறுவர்தின முதியோர்வாரக் கட்டுரை, கவிதைப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கலும், முதுமையிலும் சமூகப் பணிசெய்த முதியோர் கௌரவிப்பும் இடம்பெற்றது. தொடர்ந்து மட்டுவில் சந்திர மௌலச வித்தியாலய மாணவிகளது "காத்தவராயன்'' சிந்துநடைக் கூத்தும், அல்லாரை அரசினர் வித்தியாலய மாணவர்களது 'வாழவிடுங்கள்' என்ற நாடகமும் இடம்பெற்றது. (24)



2004 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சிவார விழாவை முன்னிட்டு, நெடுந்தீவு பிரதேச சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட சனசமூக நிலைய நூலகங்களுக்குச் சிறுவர் பகுதி நூல்கள் வழங்கும் நிகழ்வில் - சனசமூக நிலையத் தலைவர் ஒருவருக்கு நெடுந்திவு பிரதேச சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சுப்பிரமணியம் நூல்களை வழங்குவதையும், அருகில் பிரதேசசபை செயலாளரையும் காணலாம். (113)

## மிதிவெடிகள் அகற்றும் பிரிவின் வெளியீட்டு அதிகாரி யாழ்ப்பாணத்தில்

இலங்கை மிதிவெடிச் செயற்பாட்டலுவலகத்தின் தகவல் வெளியீட்டதிகாரியான எஸ். ருக்சான் ரத்னம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வருகை தந்து, யாழ்.மாவட்டத்தில் நடைபெறும் மிதிவெடியகற்றும் பணிகளைப் பாரவையிட்டார்.

யாழில் நடைபெறும் மிதிவெடியகற்றும் பணிகளைப் பார்வையிட்டதும், ஓரிரு தினங்களில் யாழ். மாவட்டத்திலுள்ள ஊடகவியலாளர்களுடன் சந்திப்பொன்றை நடத்தவுள்ளார்.

ஒரு வாரம் வரையில் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் இவர், மிதிவெடியகற்றும் பணிகளில் ஈடுபட்டு வரும் ஹலோ ட்ரஸ்ட், டெனிஸ், இராணுவ வெடிபொருள் அகற்றும் பிரிவினருடன் கலந்துரையாடல் நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

## பட்டப்பின் டிப்ளோமாவுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுகல்வியியல் பட்டப்பின் கல்வி டிப்ளோமா ஆகிய நெறிகளைப் பயில்வதற்குத் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பங்களைப் பெற்று, எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது (122)

## தென்மராட்சி பிரதேச செயலகம் தனியார் கட்டடத்தில்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேச செயலகம் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் சாவகச்சேரி டச்சு வீதியிலுள்ள தனியாருக்குச் சொந்தமான கட்டடம் ஒன்றில் இயங்கவுள்ளது.

தற்போது இயங்கும் வீடுகள் இரண்டிலும் பாரிய இட நெருக்கடிகள் உள்ளதாலும், வசதிக் குறைவாகவுள்ளதாலுமே இந்த அலுவலகம் புதிய கட்டடத்துக்கு மாற்றப்படவுள்ளதாகப் பிரதேச செயலக வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இந்தச் செயலகத்துக்கெனக் கட்டப்படும் கட்டடப் பணிகள் பாதியில் இடைநிறுத்தப்பட்டுள்ளமை தெரிந்ததே. (24)




# அடிப்படை வசதிகளின்றி இயங்கும் மாந்தைகிழக்கு பாடசாலைகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகள் அடிப்படை வசதியின்றி பெரும் சிரமங்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றன.

மாந்தை கிழக்கு கோட்டத்தின் முன்னணிப் பாடசாலைகளான பாலிநகர் மகாவித்தியாலயம், நட்டாங்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, பாண்டியன் குளம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளும், மூன்று முறிப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, பனங்காமம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, சிராட்டிகுளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, பொன்னகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை. பூவரசன் குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியன ஆசிரியர் பற்றாக்குறை, கட்டட வசதியின்மை மற்றும் அடிப்படை வசதிகளான போக்குவரத்து வசதியின்மை, கழிப்பறை வசதியின்மை போன்ற பிரச்சினைகளுடன் நீண்ட காலமாக இயங்கி வருகின்றன.

தற்போது மழைகாலம் ஆகையால் மாணவர்கள் கற்பதற்கு இடமின்றி, அவர்களின் கற்றல் செயற்பாடுகள் தடைப்படுவதுடன் சுகாதாரச் சீர்கேடுகளையும் அவர்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதனை கருத்திற்கொண்டு சம்பந்தப்பட் அதிகாரிகள் உரிய நடவடிக்கையை மேற்கொண்டு மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கும், சுகாதார சீரழிவைத் தடுப்பதற்கும் உதவ வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## எலும்புக்கூடு கண்டெடுப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பூநகரிப் பகுதியில கணபதி பாலசங்கர் என்பவரின் வயற்காணியில் வயல் வேலை மேற்கொண்டவேளை எலும்புக்கூடு ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

கடந்த 1990 ஆம் ஆண்டுக்கு காலப்பகுதியில் இலங்கை இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த பகுதியிலேயே இந்த எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## முன்பள்ளிகளுக்கு கட்டடங்கள் இல்லை

(மன்னார்)

மன்னார் - குளக்காடு, பள்ளமடு, விடத்தற்தீவு ஆகிய இடங்களிலுள்ள முன்பள்ளிகள் நிரந்தரக் கட்டடமின்றி இயங்கிவருகின்றன.

இதனால், முன்பள்ளிகள் தற்காலிக இடங்களில் பெரும் இன்னலகளுக்கு மத்தியில் இயங்கி வருகின்றன. இதனால், முன்பள்ளி சிறார்களின் கற்றல் செயற்பாடு பாதிக்கப்படுவதாகப் பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

# ஸ்கந்தபுரத்தில் உணர்வெழுச்சியுடன் மாலதியின் 17 ஆம் ஆண்டு நிகழ்வு

(கிளிநொச்சி)

முதலாவது பெண் மாவீரர் 2ம் லெப்டினன்ட் மாலதியின் 17 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு ஸ்கந்தபுரம் பிரதேசத்தில் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது.

இந்தநிகழ்வில் பொது இடங்கள், வீதிகள் தோறும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு, கடந்த ஞாயிறுக்கிழமை எழுச்சிக்கோலம் பூண்டிருந்ததைக் காணக்கூடியதாக விருந்தது.

இந்த நிகழ்வு அக்கராயன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சபாரட்ணம் தலைமையில் ஸ்கந்தபுரம் மாவீரர் மண்டபத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமானது. பொதுச் சுடரை தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் சபாரட்ணம் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை அக்கராயன் வலய அரசியற்துறைப் பொறுப்பாளர் குறளமுதன் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வின் ஈகச்சுடரை ஸ்கந்தபுரம் வர்த்தக சங்கத் தலைவர் ஏற்றிவைத்தார்.

மாவீரர் மாலதிக்கான மலர் மாலையை அக்கராயன் அபிவிருத்தி நிறுவன திட்ட இணைப்பாளர் முத்துராசா அணிவித்தார்.

இந்த நிகழ்வின் சிறப்புரையில் பெண்களின் எழுச்சியின் அவசியமும், தற்போதைய உலக அரங்கில் பெண்களின் செயற்பாடுகள் முக்கியத்துவம் பெற்றுள்ளமையும், எமது தமிழீழ போராட்டத்தின் பலமிக்க சக்தியாக பெண்கள் விளங்குகின்றனர் எனவும் எடுத்துக்கூறப்பட்டது. (ஸ்ரீ)

# மல்லாவி பாலியாற்றின் ஊடாக பயணம் செய்யும் மக்கள் பெரும்சிரமம்



முல்லைத்தீவு - பாண்டியன் குளம், மல்லாவி பாலியாற்றின் ஊடாக பிரயாணம் செய்யும் மக்கள் பெருஞ்சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு - பாண்டியன் குளம், கரும்புள்ளியான், நட்டாங்கண்டல் ஆகிய பிரதேச மக்கள் பிரயாணம் செய்யும் பாலியாற்றுக்கான பாலம் அமைக்கப்படாமையால் பெரும் சிரமங்களையும் ஆபத்துக்களையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

பாலியாற்றுக்கான பாலம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதும், இதுவரை மேற்படி பாலத்தினை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

இதேவேளை, சிராட்டிக்குளம் நட்டாங்கண்டல் வீதியிலுள்ள பறங்கியாற்றின் பாலம் முற்றாக சேதமடைந்துள்ளமையால், இந்தப்பகுதியில் உள்ள மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

### வன்னிப்பிரதேசத்தில்

# இடைநிறுத்தப்பட்ட உதவிக்கொடுப்பனவு மீண்டும் வழங்குவதற்கு தீவிர முயற்சி!

வன்னிப் பெருநிலப்பரப்பில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டு வந்த உதவிக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளமை, கல்வி அமைச்சு இநதமாவட்ட மாணவருக்கு செய்துள்ள பாரிய துரோகமாகும். இடைநிறுத்தப்பட்டுள்ள புலமைப்பரிசில் கொடுப்பனவுகளை காலதாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்கு எமது தொழிற்சங்கங்கள் தீவிர முயற்சி எடுக்கும் என, இலங்கைத் தமிழர் ஆசிரியசங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலிருந்து கடந்த 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த கொடுப்பனவுகளை இடைநிறுத்தியமையானது, கல்வி அமைச்சானது இந்த மாவட்ட மாணவர்களுக்கு இழைத்துள்ள பாரிய துரோகமாகும்.

இப்படியான ஒரு செயற்பாடு தென்னிலங்கையில் இடம்பெற்றிருப்பின் அது பாரிய நெருக்கடியினை ஏற்படுத்தியிருக்கும் என்பது மட்டுமல்லாமல், அதற்கு உடனடித் தீர்வும் காணப்பட்டிருக்கும்.

மேலும் போர்க்காலச் சூழ்நிலையில் அக்காலப் பகுதியில் பலத்த இன்னல்களுக்கு மத்தியில் அந்த மாணவர்கள் பரீட்சைக்குத் தங்களைத் தயார் செய்வதுடன், மாத்திரமன்றி பரீட்சையிலும் சித்தியடைந்துள்ளனர். அந்தமாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டுவந்த கொடுப்பனவுகளை இடைநிறுத்தியுள்ள கல்வி அமைச்சின் செயற்பாடானது இந்த மாணவச் செல்வங்களின் மனங்களை மேலும் புண்படுத்திய செயலாகும்.

இந்தகாலப் பகுதியில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கொடுப்பனவுகளை மீளவும் பெற்றுக் கொடுப்பதற்கு எமது சங்கம் தீவிர முயற்சி செய்யும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (122)



கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் அமைந்துள்ள பிரதான பஸ்தரிப்பு நிலையம் இதுவரையில் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதைப் படத்தில் காணலாம்.
-படம் : பாஸ்கரன்



அண்மையில் முல்லைத்தீவு பனங்காமம் குளம் உடைப்பெடுத்ததை அடுத்து, அதனைத் தடுப்பதற்காக அவசர வேலைகள் மேற்கொள்ளப்பட்டதைக் காணலாம்.

## அபிவிருத்தி வேலைகளை வங்கிக்குழு பார்வையிட்டது

வவுனியா மாவட்டத்தில் உலக வங்கியின் நிதியுதவியுடன், நியாப் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை உலக வங்கிப் பிரதிநிதிகளின் குழு கடந்த சனிக்கிழமை பார்வையிட்டுச் சென்றுள்ளது.

வவுனியா ஈச்சங்குளம், பத்தினியார் மகிளங்குளம், பூவரசங்குளம் ஆகிய பகுதிகளுக்கு, நியாப் திட்டத்தின் செயலணிக் குழுவில் அங்கம் வகிக்கும் பெனர்ன்டோ, வவுனியா அரச அதிபர் கணேஸ் மற்றும் பலர் சென்று பார்வையிட்டனர்.

## நிரந்தரக் கட்டடமின்றி இயங்கும் முன்பள்ளி

ஊற்றுப்புலம் கிராமத்திலுள்ள ஜெகதீஸ் முன்பள்ளிக்கு நிரந்தர கட்டடம் இதுவரையில் அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

இந்த முன்பள்ளி தற்காலிகமாக அந்தக் கிராம பொதுநோக்கு மண்டபத்தில் இயங்கி வருகின்றது. இந்த முன்பள்ளியில் 40 சிறார்கள் கற்றலில் ஈடுபடுகின்றனர். 2 ஆசிரியர்கள் கற்பித்தலிலும் ஈடுபட்டு வருகின்றர்.

இந்த நிலையில் இந்தக் கிராமத்திற்கான முன்பள்ளியை சம்பந்தப்பட்டவர்கள் கவனமெடுத்து அமைத்துக் கொடுப்பதற்கு ஆவண செய்து தருமாறு அந்தக் கிராம மக்கள் கேட்டுள்ளனர்.

# ஆனைவிழுந்தான் பிரதேசத்தில் சிறுகைத்தொழில் மேற்கொள்ள ஏற்பாடு

(ஆனைவிழுந்தான்)

ஆனைவிழுந்தான் கிராமத்தில் சிறு கைத்தொழில் மேற்கொள்வதற்காக, அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் கெயர் நிறுவனம் நிதியுதவி வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிதியுதவி மூலம் சமூக பொருளாதார அபிவிருத்திச் சங்கத்தினரால் எண்ணெய் வடிக்கும் வடிசாலை, மிக்சர் தயாரிப்பு நிலையம் போன்றவை ஆரம்பிப்பதற்கான முதற்கட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதில் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் குடும்பத்தினருக்குத் தொழில் வாய்ப்புப் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ)

# நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களை மினிக்பாம் பகுதிக்கு மீளக்குடியமர நடவடிக்கை

வவுனியா - அடப்பங்குளம் நலன்புரி நிலையத்தில் வாழ்ந்து வரும் மக்களை, செட்டிகுளம் மினிக்பாம் பகுதியில் மீளக் குடியமர்த்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது மினிக்பாம் பகுதியில் கனரக வாகனங்களைக் கொண்டு புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்தகால யுத்தத்தின் காரணமாக இடம் பெயர்ந்த மக்களே அடம்பங்குளம் நலன்புரி நிலையத்தில் வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஊற்றுப்புலம் கிராமத்தில் புனரமைப்புப்பணி நிறுத்தம்

ஊற்றுப்புலம் கிராமத்திற்கு கெயர் நிறுவனத்தின் நிதியுதவியுடன் கே.டி.ஆர்.ஆர் நிறுவன அனுசரணையுடன் 150 கிணறுகள் வெட்டிக் கட்டிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு, கிணறுகள் வெட்டப்பட்ட நிலையில் இந்த கிணறுகள் கட்டுவதற்கான நிதி போதாமல் உள்ளதெனக் கூறி இந்தத்திட்டத்தைப் பூரணமாகப் பூர்த்தியாக்காமல் கைவிட்டுள்ளனர். இந்தக் கிணறுகளைக் கட்டுவதற்கு கே.டி.ஆர்.ஆர் நிறுவனத்தால் ஒக்ஸ்பாம் நிறுவனத்திடம் நிதியுதவி கோரி கடிதமொன்று கையளிக்கப்பட்டது.

இந்த நிலையில் வெட்டப்பட்ட கிணறுகள் கடும் மழை காலத்தில் இடிந்து விழும் அபாயம் ஏற்படும் அச்சம் தோனறியுள்ளது.

இந்த நிலையை நீக்குவதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் கவனம் செலுத்துமாறு அந்தப் பகுதிமக்கள் தெரிவித்தனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*குறித்தது கூறாமைக் கொள்வாரோடு ஏனை*
*உறுப்புஓர் அனையரால் வேறு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## தெனாலி ராமனின் மண்குதிரையும் அரசாங்கத்தின் சமாதான குதிரையும்

முன்னே கடிவாளம் மூன்றுபேர் பிடித்திழுக்க பின்னேயிருந்து இரண்டுபேர் தள்ள... தெனாலிராமன் குதிரை மாதம்போம் காதவழி...என்றொரு நகைச்சுவை இலக்கியப் பாடலில் - தெனாலி ராமனின் குதிரைப் பயணம் பற்றி வேடிக்கையாகக் குறிப்பிடப்பட்டுள்ளதை படித்த ஞாபகம் இன்றைய அரசின் சமாதான முயற்சிகள் பற்றிய செய்திகளைப் படிக்கும்போது எழவேசெய்கிறது.

தெனாலி ராமன் குதிரையானது மாதம் காதவழி தூரத்தை என்றாலும் நகர்ந்தது கடந்தது. ஆனால் இலங்கையரசின் சமாதானக்குதிரை ( அது அசல் குதிரை தானா என்ற சந்தேகமும் இருப்பது வேறுவிடயம்...) கடந்த ஒரு வருடகாலப் பகுதியில் ஒரு மயிரிழை அளவுகூட நகர்ந்திருக்கிறதா என்பது சந்தேகம் தான்...! இன்னும் சொல்லப்போனால் அது பின்னோக்கிய நகர்வொன்றை மேற்கொண்டு வருகின்றது என்றே கூறுதல் சரியானதாகும்.

முன்னே நோர்வே... ஜப்பான்...இந்தியா போன்ற நாடுகள் கடிவாளத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கப் பகீரதப்பிரயத்தனம் செய்தபடி முன்னே ஓரடியாவது நகர்த்த, சலியாது முயற்சித்துவரும் வேளையில் பின்னே அமெரிக்கா மற்றும் அதன் சார்பு நாடுகள் போன்றவை நின்று தள்ளியபோதும், அந்தக்குதிரை பின்னே சறுக்கத் தொடங்கியுள்ளமைக்கு பல காரணங்கள் உண்டு.

இன்று பின்னே சமாதானக் குதிரையை தமது விருப்பப்படி முன்னோக்கித் தள்ளவும், வேறுதிசைக்கு மாற்றவும் முயற்சிப்பவர்கள் இந்தக்குதிரையை போர்முனை நோக்கித்தள்ளவும், தீவிரமாகமுயன்றவர்கள் என்பது இப்போது அந்தக் குதிரையில் ஏறியமர்ந்திருக்கும் ஆட்சி அதிகாரத் தலைமைக்கு நன்குபுரியும்.

எனவே, போர்முனையில் யுத்த வெறியுடன் செலுத்திய அதேகுதிரையில் சமாதானப் பயணத்தை மேற்கொள்வதென்பது அவரால் முடியாத காரியமாகவுள்ளது. அத்துடன் கடிவாளமும், அவர் கையில் இல்லை. கடிவாளத்தை தம்கையில் மாற்றி மாற்றிப் பறித்துக்கொண்டு சமாதானத்தை தமக்கு விரும்பிய திசையில் சென்றடையும் நோக்குடன் குதிரையைச்செலுத்த முனைவதால் அதனால் ஒரே இலக்கை நோக்கி பயணிக்க முடியவில்லை. சமாதான யாத்திரையின் யதார்த்தநிலை இப்படியானதாகவே இருக்கிறது.

இந்தச் சூழலில் - இயல்பற்றதும், முரண்பாடுகளுடன் முட்டிமோதிக் கொண்டிருப்பதுமான உள்கை அரசியல் நிலையானது எந்தப் பிரச்சினையையும் மேலும் அதிக சிக்கலுக்குரிய விடயமாக மாற்றும தன்மை கொண்டதாக மாற்றிவருவதுதான் எல்லாவற்றின் மீதான நம்பிக்கையையும் இழக்கச்செய்கிறது.

இந்த உள்கைமுரண்நிலை இப்போதைக்கு தீரும் சாத்தியம் எதுவும் இருப்பதாகத் தெரியவே இல்லை. எவராலும் இதனைத் தீர்க்கமுடியுமென்றும் தோன்றவில்லை.

ஒருபுறம் சமாதானத்தின் பேரால் வழங்க உறுதியளித்துள்ள பலமில்லியன் டொலர் நிதியுதவியை எந்த வகையிலான ஏமாற்று யுத்தியைப் பயன்படுத்தலாம் என நாளும் பொழுதும் சிந்தித்து திட்டங்களை வகுத்து வரும் ஜனாதிபதியால், சமாதானமுயற்சிகளில் எந்த விதத்திலும் நேர்மையானதும், நியாயமானதும், உண்மையானதுமான ஒரு நிலைப்பாட்டுக்கு வர அவரது பங்காளிகள் அனுமதிக்கப்போவதில்லை.

அதேசமயம், அவருக்கும் இனப்பிரச்சினையை தமிழர்களின் அபிலாஷைகளுக்கேற்ப நியாயமாக தீர்த்துவைக்கும் நோக்கிலான பேச்சு வார்த்தைகளை முன்னெடுக்கும் மனோவிருப்புமில்லை.

இந்த நிலையில் வெறுமனே புற அழுத்தங்களுக்காக பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதால் ஜனாதிபதியோ, அரசோ, எதனையும் அர்த்தமுள்ள ஒன்றாக சாதிக்கப் போவதுமில்லை. இதனைக் கடந்தகால நிகழ்வுகள் மிகத் தெளிவாகவே - அனுபவப்பட்டறிவாக - உணர்த்தி நிற்கின்றன.

- அரசுக்குள் உள்கை முரண்பாடுகள்,
- அரசுக்கும் எதிர்க்கட்சிக்குமிடையே கருத்து முரண்பாடுகள்,
- ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடை யே முரண்பாடுகள்,
- பேரினவாதிகளுக்குள் சிந்தனை முரண்பாடும்,
- சமாதானத்தை வலியுறுத்தும் வல்லாதிக்க - அயலக சக்திகளிடையே ஆதிக்கமுரண்பாடுகள்.

இவையனைத்தும் இலங்கையின் சமாதானக் குதிரையை எந்தத் திசைநோக்கி நகர்த்தப்போகிறது என்பது தான் இப்போதுள்ள கேள்வி. இதற்கான பதில் இப்போதைக்கு எவரிடமும் இருப்பதாகத் தெரியவுமில்லை. முரண்பாடுகளுடன் உடன்பாடொன்றை எட்டுவது அர்த்தமுள்ளதாக அமையுமா என்ற சந்தேகம் எல்லாரிடமும் இருக்கவே செய்கிறது. இத்தகைய நம்பிக்கையற்ற சூழலிலும் சமாதானம் மீதான தமது பற்றுறுதியை, நிலைப்பாட்டை தெளிவாக முன்வைத்துள்ள விடுதலைப்புலிகளின் நேர்மையை சர்வதேச சமூகம் உணர்ந்து செயற்படவேண்டிய அவசியம் இப்போது என்றுமில்லாத வகையில் ஏற்பட்டுள்ளது என்றால் அது மிகையில்லை.

# நாடும் நடப்பும்



செய்தி:- ஜனாதிபதியின் பதவிக்காலத்தை மேலும் நான்கு வருடங்கள் நீடிக்க வழிசெய்யும் வகையில் அரசியலமைப்பு மாற்றப்படும்.

- பிரதமர் மகிந்த ராஜபக்ஷ -

# விகிதாசாரத் தேர்தல் முறையை மாற்றி தொகுதி வாரி தேர்தல் முறை அறிமுகமாகும்

## ஜனாதிபதி கூறுகிறார்

சிறுபான்மையின மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்துக்கு எத்தகைய பாதிப்பும் ஏற்படாதவகையில், தேர்தல் முறையில் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு, மீண்டும் தொகுதி வாரித் தேர்தல்முறை அறிமுகப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

வியாங்கொட சியனே தேசிய கல்வியியற் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற தெறண காணி உறுதி கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் -

தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையை மாற்றி, மீண்டும் தொகுதிவாரித் தேர்தல் முறையை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டியது காலத்தின் அவசிய தேவையாகும்.

இந்தத் தேர்தல் முறையைச் சிறுகட்சிகளினதும், சிறுபான்மைக் கட்சிகளினதும் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்துக்கு எத்தகைய பாதிப்பும் ஏற்படாதவகையில் திருத்தி, மீண்டும் தொகுதிவாரித் தேர்தல் முறையை நடைமுறைக்குக் கொண்டு வரவுள்ளோம்.

குறிப்பாக விருப்பு வாக்குமுறை உடனடியாகத் திருத்தப்பட வேண்டியுள்ளது. இதனால்தான் தேர்தல்கால வன்முறைகளும், கட்சிக்குள்ளேயே கழுத்தறுப்புக்களும் நடக்கின்றன.



மேலும் சுதந்திர ஊடகங்கள் என்கின்ற சில பத்திரிகைகள் ஜனாதிபதிக்கும், ஜே.வி.பிக்குமிடையே முறுகல்கள் ஏற்பட்டுள்ளதாகச் செய்திகளை வெளியிட்டுவருகின்றன. ஆனால், அந்தச் செய்திகளில் எந்தவித உண்மைகளும் இல்லை.

இந்த நேரம்வரைக்கும் ஜே.வி.பிக்கும், எனக்குமிடையே எந்த முரண்பாடுகளும் ஏற்படவில்லை. ஆனால், ஐக்கியதேசியக் கட்சி துண்டு துண்டாகி விடக்கூடிய அளவுக்கு அந்தக் கட்சிக்குள் முரண்பாடுகள் தலைதூக்கியுள்ளன. கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும், கட்சியிலிருந்து வெளியே தூக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இருந்தும் இவற்றைப்பற்றி இந்தச் சுதந்திர ஊடகங்கள் சிறிதளவேனும் செய்திகளை வெளியிடுவதில்லை.

இது அந்த ஊடகங்களின் சுதந்திரத்தன்மையையே கேள்விக்குள்ளாக்குகின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி தற்போது 116 நாடாளுமன்ற ஆசனங்களின் உதவியுடன் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. இந்த எண்ணிக்கை விரைவில் 144 ஆக உயரும் எனத் தான் எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்.பிரதம தபாலகத்தில் வாகன தரிப்பிட வசதியில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.தபாலகத்தில் கட்டட வசதியிருந்தும், வாகனங்களைப் பாதுகாப்பாக விடுவதற்கு இடவசதியில்லாததால் தபாலகத்துக்குச் செல்வோர் பலத்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

யாழ்.தபாலகத்தில் வாகனங்கள் தரித்து நிற்பதற்கு வசதியாக இதுவரையும் கொட்டகைகள் எதுவும் அமைக்கப்படவில்லை. அத்தோடு, மரநிழல்களுமற்ற நிலையில், கொட்டும் மழையிலும், கடும் வெயிலிலும் வாகனங்களை நிறுத்த வேண்டிய சூழ்நிலையே உள்ளது.

தபாலகத்தின் முன்பகுதியில் வசதியான இடம் இருந்தும், அங்கு சைக்கிள், மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களை விடுவதற்கு ஊழியர்கள் அனுமதிப்பதில்லை என்றும், தற்போது கடும் வெய்யில் காரணமாக - இந்த வெயிலில் விடுகின்ற வாகனங்கள் காற்றுப்போன நிலையில் மக்கள் உருட்டியபடி செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

# சமுர்த்தி மன்றத்தின் பொதுக்கூட்டம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் - செயலக மாநாட்டு மண்டபத்தில் மன்றத் தலைவர் எஸ்.கே.ஆனந்தவேல் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

2003/2004 ஆம் ஆண்டுக்கான சங்கச் செயற்பாடுகள், முன்னேற்ற நடவடிக்கைகள் உறுப்பினர்களின் நலன்புரிச் செயற்பாடுகளின் முன்னேற்ற நடவடிக்கைகள் பற்றி இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. அத்துடன் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மன்றத்தின் 2004/2005 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது.

இதன் புதிய தலைவராக ஆர்.எல்.முகேஸ், உபதலைவராக எஸ்.கோமதி, செயலாளராக கே.விஜிதா, உபசெயலாளராக டபிள்யூ.பியந்தன், பொருளாளராக எஸ்.பாஸ்கரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்தக் கூட்டத்தில் சமுர்த்தி வங்கி முகாமையாளர்களான யமுனா அருள்ராஜும், சுசீந்திரராஜா, சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் ஆ.சுப்பிரமணியசர்மா ஆகியோரும் கலந்துகொண்டனர்.(44)

### வடமராட்சி வலய

# பொது அறிவுப் போட்டி முடிவுகள் வெளியாகின

(ஆழியவளை)

வடமராட்சி கல்வி வலயத்தின் உயர்தர வகுப்பு பாடசாலை மாணவர்களுக்கு இடையே நடாத்தப்பட்ட பொது அறிவு, நுண் அறிவு விநாடிவினாப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விபரம் பின்வருமாறு:

தரம் 11

1ஆம் இடம்: மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, 2ஆம் இடம்: நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், 3ஆம் இடம்: வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

தரம் 12

1ஆம் இடம்: விக்னேஸ்வரா கல்லூரி, கரவெட்டி, 2ஆம் இடம்: மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, 3 ஆம் இடம்: நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

தரம் 13

1ஆம் இடம்: நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், 2ஆம் இடம்: ஹாட்லிக் கல்லூரி, 3ஆம் இடம்: வட இந்து மகளிர் கல்லூரி. (122)

தெற்கு திசையினிலே

கொழும்பிலிருந்து இந்திரஜித்

# தென்னிலங்கை அரசியலில் வலுவடையும் அதிகாரப் போட்டி

நாட்டின் இயல்பு நிலை மீண்டும் பாதிக்கப்படும் நிலை மெதுவாக உருவாகி வருகின்றது. நாட்டில் மக்கள் பொருளாதார தளர்ச்சியால் சோர்வடைந்து வருகின்றனர்.

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவின் காரணமாக மக்கள் தமது சேமிப்பில் இருந்து விலகிச் செல்லும் நிலையை அடைந்து வருவது மாத்திரமல்லாமல், அன்றாட வாழ்க்கையையும் சமாளித்துப் போகும் நிலைக்குச் சென்றுள்ளனர். எனவே அவர்கள் தற்சமயம் ஆட்சியிலுள்ள அரசாங்கத்தை தூற்றும் நிலைக்கு வந்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் மக்கள் வாழ்க்கைச் செலவில் பாரிய முன்னேற்றத்தைக் காணாதபோதிலும் பாரிய பொருளாதார அழுத்தத்துக்கு உள்ளாகவில்லை.

ஆனால், இன்று நிலைமை மாறியுள்ளது. எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்படும் என்ற உறுதியின் மத்தியில், நாட்டில் நாள்தோறும் பொருட்களின் அதுவும் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரிப்புச் செய்யப்பட்டு வருகின்றன. அதுவும் தற்போதைய பொருளாதாரக் கொள்கையானது இரண்டு கட்சி கலப்பு பொருளாதார கொள்கையாகக் காணப்படுவதால், அதனை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் எழுந்துள்ளன. ஜே.வி.பி. தமது கட்சியின் கொள்கையின் அடிப்படையில் பொருளாதாரத்தைச் சரி செய்யும் முனைப்பை மேற்கொள்கிறது.

அதனை ஏற்றுக்கொண்டாலும், பிரச்சினையை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் பிரச்சினை என்ற அடிப்படையில் பிரதான பொருளாதாரக் கொள்கையை வகுத்துக் கொண்டிருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தடுமாறும். குளங்களைப் புனரமைக்கும் திட்டத்தை ஜே.வி.பியின் ஆலோசனையின் அடிப்படையில் அரசாங்கம் செயற்படுத்தியது. ஆனால், அதில் நிதிமோசடியும், அதேநேரம் உரிய திட்டமின்மையும் காணப்படுவதாக ஜனாதிபதியே குற்றம் சுமத்தியுள்ளார். அத்துடன் அவர் அது தொடர்பாக அறிக்கையொன்றை அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளார். காலத்துக்கு ஒவ்வாத ஒழுங்கு முறையற்ற ரீதியில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது ஐக்கிய தேசியக் கட்சிக்கு சார்பான கொழும்பு ஊடக இதழ் ஒன்றில் செய்தியாக, அதுவும் ஜனாதிபதி அமைச்சரவைக்குச் சமர்ப்பித்த அறிக்கையின் பிரதியுடன் வெளியாகியுள்ளது எனவே, இங்கு ஜே.வி.பியின் வசம் உள்ள விவசாய அமைச்சில் ஒழுங்கின்மை நடந்துள்ளது என்பதற்கு அப்பால் கூட்



டாட்சியில் அதிருப்தியையும் கொண்டு வந்துள்ளது.

வரலாற்றில் இலங்கையின் பொருளாதாரத்தை எடுத்துக் கொண்டால், ஆரம்பத்தில் இருந்து கலப்புப் பொருளாதாரக் கொள்கையின்கீழ் நாடு பாரிய பொருளாதார வளர்ச்சி எதனையும் பெறவில்லை.

அதற்குப் பின்னர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவால் சுயபொருளாதாரக் கொள்கை அமுல் செய்யப்பட்ட வேளையில், அது உரிய முறையில் அமுல் செய்யப்படாமை காரணமாகத் தோல்வியைத் தழுவியது. இந்தத் தோல்வியே ஐக்கிய தேசியக் கட்சியின் பதினேழு வருட நீண்ட கால ஆட்சிக்கு வழிவகுத்தது.

பின்னர் வந்த காலப்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி திறந்த பொருளாதாரக் கொள்கையை நாட்டுக்கு அறிமுகப்படுத்தியது. அதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை அது திட்டமிட்டது. அந்தக் கால கட்டத்தில் வடக்கு - கிழக்கை தவிர்ந்த ஏனைய தென்னிலங்கைப் பகுதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. இருப்பினும் வடக்கு - கிழக்கு யுத்தம் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் வியாபித்த போது ஐக்கிய தேசியக் கட்சியின் திறந்த பொருளாதாரக் கொள்கையை உரிய முறையில் அமுல்செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. தற்சமயம் ஜே.வி.பி திறந்த பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக் கொண்டுள்ள போதும், அதற்குள் தமது சுயபொருளாதாரக் கொள்கையையும் திணிக்க முயற்சிக்கிறது. இதில் ஒரு கட்டமாகவே அது தனியார் மயத்தை எதிர்க்கும் செயற்பாடாகும். ஜே.வி.பி.யுடன் அரசாட்சி ஒப்பந்தத்துக்கு செல்லும் முன்னரேயே ஜனாதிபதியின் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தனியார் மயக் கொள்கையை முழுமையாகவே ஏற்றுக் கொண்டு, அதற்கான ஒப்பந்தங்களையும் நிறைவேற்றியிருந்தது. அந்தக் கட்சியின் ஆட்சி தோல்வி கண்ட பின்னர், அதனை ஐக்கிய தேசியக் கட்சி நடைமுறைப் படுத்தியது. இந்த நிலையில் மீண்டும் ஜே.வி.பியின் உதவியுடன் ஆட்சியை அமைத்த ஜனாதிபதியின் பொதுஜன முன்னணி தாம் முன்னர் திட்டமிட்ட, அதற்காக ஒப்பநதங்களைச் செய்து கொண்டவற்றை ரத்து செய்யமுடியாத நிலைக்குச் சென்றுள்ளது. இந்த நிலையில் ஜே.வி.பியின் தனியார் மயத்துக்கு எதிரான போக்கை ஜனாதிபதியால் ஏற்றுக் கொள்ளமுடியும். ஆனால அதனை நடைமுறைப்படுத்த முடியாதநிலை காணப்படுகிறது. எனவே ஒன்றை ஒன்று விட்டுக் கொடுக்கும் போக்கில்லாத ஆட்சி ஒன்று இன்று நிலவுகிறமையால் நாட்டின் பொருளாதாரத்தின் சிறப்பம்சங்களை எதிர் பார்க்கமுடியாது.

இலங்கை சுதந்திர கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள நிதியமைச்சு பொருளாதாரத் தளர்ச்சியை ஈடு செய்யும் முகமாக அத்தியாவசியப் பொருட்களின் விலையை உயர்த்துகிறது. ஆனால் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி குறிப்பட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலையுயர்வை மக்கள் மீது சுமத்தாத வண்ணம் அதற்கு மானியத்தை வழங்கும் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. எனவே இங்கு முரண்பட்ட அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக நாட்டில் ஸ்திரமற்ற நிலை ஏற்பட்டு வருகிறது.

பொருளாதாரக் கொள்கைகள்



ஸ்திரமற்ற நிலையில் செல்கின்ற அதேநேரம், தென்னிலங்கையில் அரசியலின் தன்மையும் ஸ்திரமற்றதாகவே தொடர்கிறது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையானது, இன்னமும் தீர்ந்தபாடில்லை. ஜனாதிபதியைப் பொறுத்த வரையில் அண்மைக் காலமாக அவர் ஜே.வி.பியுடன் நேரடித் தொடர்புகளைக் குறைத்தே வந்துள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமைப் பதவியில் இருந்து அவர விலகிக் கொண்டதை அடுத்து, இவ்வாறான நேரடித் தொடர்புகள் தொடர பாகக் கூட அவர்கள் ஜே.வி.பியின் நிலைப்பாடுகளுக்கு அப்பால் நின்றே சிலவேளைகளில் கருத்துக் கூறிவருகிறார்.

இதன் மூலம் அவர் சமாதானப் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பித்து விடுவார் என்ற எண்ணத்துக்கு வந்துவிட முடியாவிட்டாலும், ஜே.வி.பி ஜனாதிபதியுடன் முன்னரைப் போல முரண்படுகின்ற நிலையைத் தவிர்ப்பதற்கு ஜனாதிபதியின் இந்த உத்தி பிரயோசனததை தந்திருக்கிறது என்றே கூறவேண்டும். அண்மையில் நடைபெற்ற சமாதானத்துக்கான தேசிய அமைப்பின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் ஜனாதிபதி ஒஸ்லோ பிரகடன அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் என தெரிவித்த போதும், அதற்கு ஜே.வி.பியால் உடனடியான எதிர்ப்பை வெளிக்காட்ட முடியவில்லை. எனவே ஜே.வி.பி தற்சமயம் தமது அரசியல் நகர்வை நிதானத்துடன் முன்வைக்கும் நிலைக்குச் செல்ல ஜனாதிபதியின் உத்தி உதவியுள்ளது என்பது உண்மை.

இதற்கிடையில் இதனைக் கொண்டு ஜனாதிபதி உடனடியாக பேச்சுவார்த்தையை ஆரம்பித்து விடுவார் என எதிர்பார்க்க முடியாது. இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி அடுத்த கட்டப் பாரிய அரசியல் நகர்வு ஒன்றுக்கு தம்மைத் தயார்படுத்தி வருகிறது. அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கான முனைப்புக்களை அது மேற்கொண்டுள்ளது. அதற்கு வாய்ப்பாக அரசாங்கமும் நாளுக்கு நாள் பொருட்களின் விலைகளை உயர்த்தி, வாழ்க்கைச் செலவை அதிகரித்து வருகிறது. இதனையே தமது ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசாரமாக ஐக்கிய தேசியக் கட்சி பயன்படுத்த அரசாங்கமே சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளமையை மறுக்கமுடியாது. மறுபுறத்தில் அரசாங்கத்துக்கு வேண்டுமென்கின்ற நேரத்தில் உதவலாம் என எதிர்பார்க்கப்பட்ட ஜாதிக ஹெல உறுமயவும், அதிகாரப் போட்டியில் சிக்கித் தவிக்கிறது. எனவே ஐக்கிய தேசியக் கட்சியை பொறுத்தமட்டில் தற்சமயம் பொற்காலமென்றே கூற வேண்டும். அது தனிப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சிக்கு பொற்காலமாக இருந்தாலும், ஜனாதிபதி தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்காவிட்டால், அது வரைக்கும் நாட்டு மக்களுக்கு பொருளாதார ரீதியில் நரக சூழ்நிலையே மிஞ்சும்.

சாந்தை கிராமம் ஓர் பார்வை...

- காவலூர் விஜேந்திரன்

# அதிகாரிகளின் கடைக்கண் பார்வைக்கு காத்துக்கொண்டிருக்கும் சாந்தை!

யுத்தம் அல்லது வேறு இயற்கை அனர்த்தங்கள் காரணமாக ஒருவர் தனது வாழிடத்தைவிட்டு வெளியேறி உள்நாட்டிலேயே வேறு இடத்தில் தங்கியிருத்தல். அவ்வாறு நாட்டை விட்டு வெளியேறும் போது அவர் அகதி என்ற அந்தஸ்த்தைப் பெறுகின்றார். இன்று பல காலங்களாக அரவணைப்பின்றி பிரித்து ஒதுக்கப்பட்ட ஒரு கிராமமாக ஏக்கங்கள், தவிப்புக்களுடன் தீண்டத்தகாத ஒரு சமூகமாக சாந்தை கிராமமுள்ளது. மனிதநேய உதவிகள் யாவும் மனுக்குலத்தின் ஈடேற்றத்துக்காக உரிய அதிகாரிகளும், அமைப்புக்களும் பாரபட்சமின்றியும் பாகுபாடு காட்டாமலும் நிறைவேற்றப்படவேண்டும்.

ஒன்றுபட்ட குடும்பமாக, ஒற்றுமையாக ஒன்றித்துச் செயற்படுவதன் மூலம், எமது உரிமைகளையும், சலுகைகளையும் பெறமுடியும். கிராம வளர்ச்சியின் ஊடாகவே பிரதேச, நகர வளர்ச்சியை ஏற்படுத்த முடியும். இன்று கல்வி, தொழில், சமயம், உறவு என்ற கட்டுமானத்துக்குள் கட்டுண்ட இச்சமூகம் வெளிவரவேண்டும். மிக நீண்ட காலமாக அடிப்படை வசதிகளைக் கூட ஒழுங்காகப் பெறமுடியாத நிலையில், தாமும் தமது கிராமும் என்ற வட்டத்துக்குள் வாழப் பழகிக் கொண்ட கிராமமே சாந்தையாகும்.

யாழ்ப்பாணத்தில் பல கிராமங்கள் தேவைகளை எதிர்பார்த்து அபிவிருத்திக்காக காத்திருக்கின்றன. காத்திருக்கும் கிராமங்களின் பட்டியலில் சாந்தை என்ற கிராமமும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஜே/148, ஜே/149 ஆகிய இரு கிராம சேவையானது பார்வையிலுள்ள இந்தக் கிராமம் சில்லாலை, பண்டத்தரிப்பு ஆகிய கிராமங்களின் இணைப்பாகவுள்ளது. 340 குடும்பங்களைச் சேர்ந்த 1100க்கு மேற்பட்ட மக்கள் எதுவித அடிப்படை வசதிகளுமின்றி, கடந்த பல வருடங்களாக வாழ்ந்து வருகிறார்கள். அனேகமானோர் கடற் தொழிலாளர்களாக இருந்த போதிலும், கடற்தொழிலுக்கான போதிய வசதி வாய்ப்புகள் இன்மையும், இராணுவக் கெடுபிடிகளுமே பலரை கூலித்தொழிலாளர்களாக மாற்றியுள்ளது.

இந்தக் கிராமத்தில் தண்ணீர்ப் பிரச்சினை, மின்சாரம் இல்லை, கிராம ஒழுங்கைகள் சீரின்மை, கடற்தொழிலில் பாஸ் பிரச்சினை இவற்றுடன் மருத்துவ வசதிகளையும் இலகுவாக நிறைவேற்ற முடியாதவர்களாகவுள்ளனர். இந்தக் கிராமத்துக்குச் செல்லும் வீதி வரையும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இவர்களது ஒழுங்கை தவிர வீதி ஒழுங்காகப் போடப்பட்டுள்ளது. குடியேற்றத் திட்டத்துக்கான ஒழுங்கை 500 மீற்றர் வரையானதே. இதற்கு தார் ஊற்றியதாகவோ வீதி திருத்தத்துக்கான அடையாளங்களையோ அவதானிக்க முடிவதில்லை.

திட்டமிட்டு ஒதுக்கப்பட்ட ஒரு



கிராமமர்கவே இந்தக் கிராமமுள்ளது. இங்குள்ளவர்கள் நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டிருந்த போதிலும், கல்வி ரீதியாக இவர்களது அடைவு மட்டம் மிகவும் குறைவாகவேயுள்ளது. இதற்கு அவரவர் வெவ்வேறு காரணங்களை முன்வைத்தாலும், சிறுவர் முதல் அனைவரும் வேலைக்குப் போவதே இவர்களின் நிலைக்குக் காரணமாகும். குடும்ப வறுமையும், பழக்கப்பட்ட தன்மையுமே தொடர்ச்சியாகக் கூலிக்கு உழைத்து தமது பிழைப்பை தகர்த்திக் கொண்டிருக்கின்றனர்.

இந்தக் கிராமத்தில் இருந்து பல்கலைக்கழகத்துக்கும், தேசிய கல்வியியல் கல்லூரிக்கும் தலா ஒருவரே இவ்வளவு காலத்தில் அதுவும் சென்ற ஆண்டில் சென்றுள்ளனர். இவர்களைவிட க.பொ.த. உயர்தரம் வரை கல்வி பயின்றவர் என்றால் ஒருவரே உள்ளார். இப்பொழுது 250 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். இவர்களை விட கடந்த வருடமும், இந்த ஆண்டுமாக 100 மாணவர்கள் இடைவிலகியுள்ளனர். முன்பள்ளி 83 மாணவர்கள், நான்கு ஆசிரியர்களுடன் இயங்கி வருகிறது. ஆறுமுகம் - கடம்பன், வீரபாகு - வினோத்ராஜ் ஆகிய இருவரும் மாலை நேர வகுப்புக்களை நடத்தி வருகின்றார்கள். இவர்களது முயற்சி பாராடடத்தக்கது. இவை எவ்வளவு காலம் தொடரும் என்பதே கேள்விக் குறியாகவுள்ளது.

ஆயன் இல்லா ஆடுகள் போல் அல்லற்படும் இந்தக் கிராம மக்களுக்கு பொறுப்பான தலைமையின்மையும் ஒன்றாக ஒருமித்துச் செயற்படும் தன்மையின்மையுமே இவர்களது இவ்வாறான நிலைக்கு காரணமெனலாம். சாந்தை விநாயகர் சனசமூக நிலையத் தலைவர் கணபதி - செல்வராசா தமது கிராமம் தொடர்பாக பகிர்ந்து கொண்டவற்றை இங்கு தருகிறோம்.

எமது கிராமம் பல காலங்களாக பழிவாங்கப்பட்டு வருகின்றது. எதுவித அடிப்படை வசதிகளுமின்றியே வாழ்ந்து வருகிறோம். தண்ணீர் எடுப்பதென்றால் வயல் கிணறுகளுக்கே போகவேண்டும். மழை காலங்களில் கிணற்று நீரும் வயல் நீரும் ஒரே மாதிரியாகவே தெரியும். இவை உயிர் இழப்புக்கள் கூட ஏற்பட வாய்ப்பாக அமைகிறது. குழாய்க் கிணறுகளை அமைத்தோ அல்லது தண்ணீர்ப் பவுசர்களிளாவது எமது தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்.

மருத்துவ தேவைகளாயின், நான்கு கிலோமீற்றர் தூரமுள்ள பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை, சங்கானை அரசினர் வைத்தியசாலைகளுக்கோ போகவேணடும். கிழமைகளில் இரு நாளாவது இங்குவந்து மருத்துவ வசதிகளை ஏற்படுத்த பொறுப்பானவர்கள் முன்வரவேண்டும். நோய்கள் ஏற்பட முன்வரவேண்டிய பொது சுகாதார பரிசோதகர் நோய்கள் வந்த பின்னரே வருகிறார். சுகாதாரம்,

(11ஆம் பக்கம் பார்க்க)

# 1500 கிலோமீற்றர் சென்று தாக்கும் அணுவாயுத ஏவுகணையை பாகிஸ்தான் பரிசோதித்தது!

(கராச்சி)

அணுவாயுதங்களைத் தாங்கிச் செல்லும் மத்தியதர வகையைச் சேர்ந்த ஏவுகணையொன்றை பாகிஸ்தான் நேற்று வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளதாக அறிவித்துள்ளது.

ஹட்ரவ் - வி குவாரி என்ற இந்த ஏவுகணை சுமார் 1500 கிலோமீற்றர் சென்று நிலைகளைத் தாக்கும் வல்லமையுடையது.

தமது இந்தப் பரிசோதனை அருகில் உள்ள அணுவாயுத நாடுகளுக்கு அச்சுறுத்தல் செய்தியாக அமையமாட்டதென பாகிஸ்தானின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



இந்த ஏவுகணைப் பரிசோதனை தொடாபாக இந்தியா உட்பட பாகிஸ்தானின் அயல்நாடுகளுக்கும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டதாக பாகிஸ்தானின் பாதுகாப்பு உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்த ஏவுகணை பரிசோதனை நடத்தப்பட்டவேளை பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் மற்றும் பிரதமர் செளகாத் அசிஷ் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

எமது விஞ்ஞானிகளின் இந்த ஆர்வத்தையிட்டு, பாகிஸ்தான் பெருமைகொள்கின்றதென இந்தப் பரிசோதனையில் கலந்துகொண்ட பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் தெரிவித்தார்.

இந்திய - பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையில் தற்போது பேச்சுவார்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் பாகிஸ்தான் இந்த ஏவுகணைப் பரிசோதனையை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# சவூதி நகரசபைத் தேர்தலில்; பெண்கள் வாக்களிக்க தடை!

சவூதி அரேபியாவில் நகரசபைத் தேர்தலுக்கான தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ளது. இதில் வாக்களிக்க பெண்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாதென சவூதி உள்துறை அமைச்சர் இளவரசர் நயேப் பின் அப்துல் அஜீஸ் கூறினார்.

மன்னர் ஆட்சி நடக்கும் சவூதியில் இப்போதுதான் முதல் முறையாக தேசிய அளவில் தேர்தல் நடைபெறவிருக்கிறது. நகரசபை உறுப்பினர்களில் அரைவாசிப்பேர் இந்தத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

ஆனால் பெண்கள் தேர்தலில் போட்டியிடத் தயாராகி வருகிறார்கள். பெண்கள் போட்டியிடக்கூடாது என்று அதிகாரபூர்வமாகக் கூறினால் தவிர மற்றபடி அவர்கள் போட்டியில் இருந்து விலகப்போவதில்லை என்று தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

## லக்ஷியா வெற்றிகரமாக சோதனை!

ஆளில்லாமல் குறிப்பிட்ட இலக்கு நோக்கிப் பறக்கும் லக்ஷியா விமானத்தை இந்தியா நேற்று வெற்றிகரமாக பரிசோதித்தது.

பெங்களூரில் உள்ள விமான தொழில்நுட்ப நிறுவனத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட ஆளில்லாமல் பறக்கும் லக்ஷியா விமானம் ஒரிஸா மாநிலம் சண்டிப்பூரில் நேற்று வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது. போர்க்களங்களை கண்காணிக்கவும், எதிரியின் இலக்கை தாக்கவும் புவிப் பரப்பை ஆராயவும் இந்த விமானம் உதவும்

# சவூதி அரேபிய தலைநகர் றியாட்டில் 4 கிளர்ச்சிவாதிகள் சுட்டுக்கொலை!



(றியாட்)

சவூதி அரேபியாவின் தலைநகர் றியாட்டில இஸ்லாமிய கிளர்ச்சிவாத சந்தேகநபர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் -

இந்த சந்தேகநபர்கள் மீதான தாக்குதலில் ஏழு படையினரும் காயமடைந்துள்ளதாகவும் அவர்களில் எவருக்கும் உயிராபத்து இல்லையெனவும் சவூதியின் உள்துறை அமைச்சு தெரிவித்தது.

நேற்றுக் காலை தலைநகர் றியாட்டின் கிழக்குப் பகுதி நகரான நாக்ரா மாவட்டத்திலுள்ள வீடு ஒன்றைப் படையினர் சுற்றிவளைத்தபோதே இந்தத் தாக்குதல் நடைபெற்றது.

இந்த வீட்டினுள் தாக்குதல் இடம்பெற்றவேளை ஏழு பெண்களும் சிறுவர்கள் சிலரும் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீட்டை படையினர் முற்றுகையிட்டவேளை, வீட்டினுள் இருந்த கிளர்ச்சிவாத சந்தேகநபர்கள் நவீனரக ஆயுதங்கள் மற்றும் கிரனைட்டுக்கள் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அத்துடன், அங்கிருந்த பெண்கள், சிறுவர்களையும் தமக்கு கேடயங்களாகப் பயன்படுத்தி வீட்டின் முதலாம் மாடிக்கு அழைத்துச் சென்றனர்.

இவர்களின் இந்த நடவடிக்கை படையினரின் கவனத்தை திசை திருப்பி தாம் தப்பித்துக்கொள்வதற்கே எனவும் உள்துறை அமைச்சு தெரிவித்தது.

இந்தத் தாக்குதலை அடுத்து சந்தேகநபர்கள் தங்கியிருந்த வீட்டை படையினர் சோதனையிட்டபோது ஆயுதங்கள் மற்றும் ஆவணங்கள் போன்றவற்றை கைப்பற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு அறிவிப்பு!



பினகிட் வேண்ட் எட்வேர்ட் ப்ரீகாட்

பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு நோர்வே நாட்டைச் சேர்ந்த பினகிட் வேண்டுக்கும், அமெரிக்காவைச் சேர்ந்த எட்வேர்ட் ப்ரீகாட்டுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. பென்சில்வேனியா மாகாணம் பிட்ஸ்பார்க்கில் உள்ள மெலான் பல்கலைக்கழகத்தில் ப்ரீகாட் பணிபுரிகிறார். பணவீக்கத்தால் பொருளாதார நிலை பாதிக்கப்படுவது குறித்து இவர்கள் ஆய்வுநடத்தியதற்காக இந்த மிக உயரிய விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

# கொலம்பிய ஆட்கடத்தல் சூத்திரதாரி அந்த நாட்டுப் பொலிஸாரால் கைது!



கொலம்பியாவில் கடந்த வருடம் எட்டு வெளிநாட்டு உல்லாசப் பயணிகளை கடத்திச்செல்லக் காரணமாக இருந்தவர் எனக் கூறப்பட்ட கிளர்ச்சிவாதக் குழுவின் தலைவர் கொலம்பிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

வலதுசாரி தேசிய விடுதலை இராணுவ அமைப்பின் தலைவரான ஜோஸ் செலஸ்ரினோ குமோரோ என்பவரே கைதுசெய்யப்பட்டவராவார்.

இவரின் உத்தரவின்பேரிலேயே 4 இஸ்ரேலியர், இரண்டு பிரிட்டிஷ் நாட்டவர் ஒரு ஜேர்மனியர் மற்றும் ஒரு ஸ்பானியர் ஆகியோர் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி கடத்தப்பட்டனர்.

இவ்வாறு கடத்தப்பட்டவர்களில் பிரிட்டன் பிரஜையான மத்தியூ ஸ்கொட் (வயது 19) என்பவர் கடத்தப்பட்ட சில நாட்களில் கடத்தல்காரர்களிடமிருந்து தப்பிவந்துள்ளார். பின்னர் மற்றையோர் விடுதலை செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட செமோரோ, பார்மினியோ என்ற மாற்றுப் பெயரில் நடமாடிய வேளையிலேயே, வெனிசுலாவின் வடபகுதி எல்லைப்புற நகரான குவாஜிரா பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டதாக சோமாலியாவின் அதிகாரியான நரான்ஜோ தெரிவித்தார்.

இவருடன் சேர்த்து மேலும் மூவர் கைதுசெய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். அத்துடன் இந்த தனிமனிதனின் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாக கடந்த 22 வருடங்களாக தாம் கலந்துரையாடி வந்ததாகவும் - சோமாலியாவில் இடம்பெற்ற ஆட்கடத்தல் மற்றும் பாரிய கொள்ளைச் சம்பவங்களுக்கு கைதுசெய்யப்பட்ட செமோரோ முக்கியமானவராக இருந்தாரெனவும் அவர் தெரிவித்தார்.

# பாகிஸ்தானின் எதிரி ஒஸாமா பின்லேடனாம்!





## முஷாரப் கூறுகிறார்

(கராச்சி)

சர்வதேச நாடுகளால் தேடப்பட்டு வரும் ஒஸாமா பின்லேடன் பாகிஸ்தானின் எதிரியென பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

ஒஸாமா பின்லேடன் பாகிஸ்தானுக்கும், ஆப்கானுக்கும் இடையில் மாறி மாறி ஓடித் திரிகின்றார். இதன்மூலம் அவர் இரு நாடுகளுக்குமிடையில் மறைந்தே வாழ்கின்றார். இவ்வாறு மறைந்து வாழும் அவர், பாகிஸ்தானின் மிக முக்கிய எதிரியென அவர் தெரிவித்தார்.

# துருக்கிப் பிரஜைகள் இருவர் ஈராக்கில் வெட்டிக் கொலை!

அமெரிக்க ராணுவத்துக்கு உதவிய துருக்கி நாட்டைச் சேர்ந்த ஒப்பந்தகாரரையும் அவரது ஈராக்கிய மொழிபெயர்ப்பாளரையும் தலையை துண்டித்து ஈராக் தீவிரவாதிகள் கொன்றனர். இந்தத் தகவலை அல்ஜசீரா தொலைக்காட்சி நேற்றுமுன்தினம் இரவு தெரிவித்தது.

ஈராக்கில் அமெரிக்க இராணுவத்துக்கு உதவி மற்றும் ஒத்துழைப்பு வழங்குபவர்களை தீவிரவாதிகள் கடத்துவதும் அதில் சிலரை கொல்வதும் வாடிக்கையாகிவிட்டது.

இந்த நிலையில் அமெரிக்க இராணுவத்துக்கு உதவிசெய்த துருக்கி நாட்டைச்சேர்ந்த ஒப்பந்தகாரர் ஒருவரை ஈராக்கைச் சேர்ந்த அன்சார் அல் சன்னா என்ற தீவிரவாத குழுவினர் கடத்திச் சென்று கொன்றனர். மேலும் அவரோடு இருந்த ஈராக்கிய மொழிபெயர்ப்பாளரையும் கொன்றனர்.

இதுபற்றிய செய்தி அல்ஜசீரா தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது.

தொலைக்காட்சி தகவலில் முகமூடி அணிந்த இரண்டு தீவிரவாதிகளுக்கு நடுவில் துருக்கி ஒப்பந்தகாரர்கள் நிற்பது மட்டும் தெரிந்தது. ஆனால் தலையைத் துண்டித்துக்கொலை செய்யும் வீடியோ காட்சி ஒளிபரப்படவீல்லை. இந்த வீடியோ தொகுப்பு இணையத்தளத்திலிருந்தே எடுக்கப்பட்டது. அவர்கள் தலையைத் துண்டிப்பது மிகவும் கொடூரமாக இருப்பதால் அந்தக் காட்சியை ஒளிபரப்பவில்லை என்றும் அல்ஜசீரா தனது செய்தியில் தெரிவித்தது.

## ஈராக்கில் கடத்தப்பட்ட 10 துருக்கியர்கள் விடுதலை!

ஈராக்கிலுள்ள துருக்கி நிறுவனமொன்றில் பணிபுரிந்த துருக்கியர்கள் 10 பேர், தீவிரவாதிகளால் ஒரு மாதத்திற்கு முன்பு கடத்தப்பட்டனர். இதைத் தொடர்ந்து அந்த துருக்கி கம்பனி ஈராக்கை விட்டு வெளியேறவேண்டும். அப்படி வெளியேறாவிட்டால் 10 பேரையும், கொன்று விடுவோம் என்று தீவிரவாதிகள் மிரட்டினர்.

வின்சன் என்ற அந்த கட்டுமான கம்பனி தன் ஊழியர்களை காப்பாற்றுவதற்காக ஈராக்கில் தன் நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்வதாக அறிவித்தது. இந்த அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து பணயக் கைதிகளாக பிடித்து வைத்து இருந்த 10 பேரையும் தீவிரவாதிகள் விடுவித்தனர்.

# அதிகாரிகளின் கடைக்கண் பார்வைக்கு....

நோய்கள் தொடர்பான அறிவுரைகளை வழங்கவேண்டும்.

பொன்னாலை, வேலணை, அல்லைப்பிட்டி போன்ற இடங்களின் கடற்பரப்புக்களிலேயே தொழில் செய்து வருகிறோம். தொழிலுக்கு போகாது விட்டால், இராணுவத்தால் பாஸ் ரத்துச் செய்யப்படுகிறது. இதனால் அதிகமான குடும்பங்கள் கூலித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. மாணவர்களது நிலையும் பரிதாபத்துக்குரியது. நீண்ட தூரமுள்ள பாடசாலைகளுக்கு கால்நடையாகச் சென்று வருகிறார்கள். அப்படி என்ன குற்றம் செய்துள்ளது எமது கிராமம் என்பதே புரியாத புதிராகவுள்ளது.

340 குடும்பங்கள் இருந்த போதிலும், 120 மலசலகூடங்களேயுள்ளன. கிணறுகளும் இவ்வாறு பற்றாக்குறையாகவேயுள்ளது. வீதி போடுபவர்கள் எமது ஒழுங்கையுடன் நிறுத்தி விடுவார்கள். ஏன் எனறால் பல காரணங்களைக் கூறுவார்கள். மின்சாரமும் இவ்வாறு இடையில் நிற்கிறது. ஆனால் வாக்குக் கேட்டு வருபவர்கள் எமது வீடு வரை வருவார்கள். இது எந்த வகையில் நியாயம் என தனது ஆதங்கங்களை நிறைவுசெய்தார் செல்வராசா.

யாழ்ப்பாணம் மனித முன்னேற்ற நடுநிலைய ஊக்குவிப்பாளர் சரோன் கடந்த பல மாதங்களாக இந்தக் கிராம வளர்ச்சியில் தன்னை இணைத்துள்ளார். இந்தக் கிராமம் தொடர்பாக அவர் கூறுகையில் -

ஊக்குவிப்பு, சேமிப்பு, சிறுவர் கல்வி, தலைமைத்துவம் தொடர்பான கருத்துக்களையும், செயல் அமர்வுகளையும் நடாத்தி வருகிறோம். இங்குள்ள மக்களுக்கு உதவி செய்வதற்கு எவரும் முன்வருவதாகத் தெரியவில்லை. நாம் இந்தச் செயற்பாடுகளுடன் சிறுமுயற்சியாளருக்கான கடன்களையும் தவணை அடிப்படையில் வழங்கி வருகிறோம். இந்தக் கிராமத்துக்கான பாதைகள் குண்டும் குழியுமாகவுள்ளது. மழை காலங்களில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகிறார்கள். தொற்று நோய்களுக்கும் அடிமையாகிவரும் இந்தக் கிராம மக்களில் 18 வயதுக் குட்பட்டவர்களில் அநேகமானவர்கள் வேலைக்குப் போகிறார்கள். இவர்களை இனங்கண்டு, தொடர்ந்து கல்வி கற்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

ஒவ்வொரு மாதமும் நிலா ஒளி என்ற பெயரில் கலை நிகழ்வுகளை நடாத்தி வருகிறார்கள். சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள ஏனைய கிராமங்களைப் போன்று இந்தக் கிராமத்துக்கும் அடிப்படை வசதிகளையாவது ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்றார் கியூடெக் நிறுவன சமாதான ஊக்குவிப்பாளர் சரோன்.

அரசாங்கத்தின் சார்பாக மக்கள் பிரதி நிதிகளாக, மக்களால் தெரிவு செய்யப்பட்டு நாடாளுமன்றம் சென்று பகட்டாக வாழும் அரசியல்வாதிகள் நீண்ட காலமாக ஏக்கத்துடன் காத்திருக்கும் இந்தக் கிராமத்தின் மீது தமது பார்வையை திருப்பலாம் தானே! இவர்களது பிரச்சினை இன்று நேற்றல்ல, நீண்ட காலமாகவே அல்லற்படுகிறார்கள்.

தேவைகளுக்கு அதிகமாக ஒவ்வொரு சேவைகளுக்குமென செயற்பட்டு வரும் அரச சார்பற்ற நிறுவனங்களாவது இவர்களது கிராம விடியலுக்கு தங்களது பங்களிப்பை வழங்கலாம் தானே. விரும்பியோ, விரும்பாமலோ விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய சாந்தை கிராம மக்களுக்கு பொறுப்பானவர்கள் முன்வந்து செயற்படுவதுடன், கிராம அபிவிருத்தியிலும் பங்குகொள்ள வேண்டும். நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட இந்தக் கிராமம் எப்பொழுது புதுப் பொலிவுடன் மிளிரும் என்பதே இந்தக் கிராமம் சார்பானவர்களின் ஏக்கமாகும். பிரதேச செயலாளர், பிரதேச சபைத் தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபையினர், மின்சார சபையினர் இனியாவது இந்தக் கிராமம் செல்வார்களா?...

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பத்து விடுதலைப் புலிகளும் பிணையில் செல்ல அனுமதி!

(கொழும்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 10 விடுதலைப்புலிப போராளிகளுக்கும் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமையும் நேற்று முன்தினமும் பிணை அனுமதி வழங்கியுள்ளது.

இருந்தபோதிலும் இந்தப் பிணை உத்தரவு நேற்றுவரை மட்டக்களப்பு நீதிமன்றத்திற்கு வந்துசேராத காரணத்தால் இவர்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் ஜூன் 8 ஆம் திகதி வாழைச்சேனையில் கிரனைட்டுடன் கைதுசெய்யப்பட்ட பயஸ் இராஜேந்திரா (குலதீபராஜ்), வடிவேல் சந்திரகுமார் (பிரசாந்) மற்றும் கடந்த வருடம் ஜூன் 17ஆம் திகதி கல்லடிப்பாலத்தில் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்ட 4 பெண்கள் உட்பட 8 பேரும் பிணையில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

விநாயகமூர்த்தி சியாமளா (சுடர் விழி), நவரத்தினம் மஞ்சுளா (திலகவாணி), நவரத்தினம் புனிதமலர் (தேர்கோதை), சிவஞானம் திருமஞ்சு (தமிழிசை), தியாகராஜா முரளிதரன் (கங்காளன்), கோபாலசிங்கம் தயானந்தம் (நந்தன்), சிறீதரன் சுதாகரன் (கண்ணண்), கதிரேசபிள்ளை ரஜீவகுமார் (நதீசன்) ஆகியோரே குறிப்பிட்ட 8 பேரும் ஆவர்.

இந்த 10 பேரையும் தலா 50 ஆயிரம் ரூபா ரொக்கம், தலா 50 ஆயிரம் ரூபா கொண்ட இருவரது சரீரப்பிணை ஆகியவற்றில் செல்ல அனுமதித்துள்ள மேன்மறையீட்டு நீதிமன்றம், வாழைச்சேனை பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்ட இருவரையும் மாதத்தில் கடைசி ஞாயிற்றுக்கிழமை வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திலும் -

கல்லடிப்பாலத்தில் கைதுசெய்யப்பட்ட 8 பேரும் மாதத்தில் கடைசி ஞாயிற்றுக்கிழமை காத்தான்குடி பொலிஸ் நிலையத்திலும் ஆஜராக வேண்டும் என்றும் நிபந்தனை விதித்துள்ளது.

திருகோணமலையில் தம்வசமுள்ள இரண்டு ஊர்காவல் படை வீரர்களை விடுவிப்பதற்கு இந்த 10 பேரையும் விடுதலை செய்ய வேண்டும் என விடுதலைப் புலிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி 3 கோடி ரூபா வேலைத்திட்டம்!

## கொரியப் பிரதிநிதி ஆரம்பித்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கான மூன்று கோடி ரூபா வேலைத் திட்டங்களை கொரிய நாட்டு வதிவிடப் பிரதிநிதி கிம்பைங் குவான் நேற்று ஆரம்பித்து வைத்தார்.

இலங்கைக்கான கொரிய நாட்டு வதிவிடப் பிரதிநிதி கிம்பைங்குவான் தலைமையிலான கொரிய நாட்டு பொறியியலாளர்கள் அடங்கிய குழுவொன்று நேற்றுக் காலை யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு விஜயமொன்றை மேற்கொண்டு இந்த வேலைத்திட்டங்களை ஆரம்பித்தது.

பலாலி விமானநிலையத்திலிருநது காலை 9 மணிக்கு யழ்.தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் நா.யோகராஜனால் அழைத்துவரப்பட்ட கிம்பைங் குவான், மையோல், ஜே.லீ, யோக் கோச் மற்றும் குருசிங்க குணசிங்க ஆகியோர் தொழில்நுட்பக் கல்லூரியின் வாசலில் வைத்து மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர்.

மங்கள வாத்தியங்கள் சகிதம் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அழைத்துச் செல்லப்பட்ட அவர்கள் விசேடமான முறையில் ஒழுங்குபடுதப்பட்டிருந்த மண்டபத்தில் அமர வைக்கப்பட்டு கூட்டமொன்று நடத்தப்பட்டது.

அங்கு தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் ந.யோகராஜன், கொரிய நாட்டின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கிம்பைங்குவான் ஆகியோர் உரையாற்றினர். தொடாந்து தொழில நுட்பக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள கொரிய நாட்டு கொயிக்கா நிறுவனத்திற்கான பணிமனையை இக்குழுவின் தலைவர் கிம்பைங் குவான் திறந்துவைத்தார்.

புதிய கட்டடத்தை அமைப்பதற்கான ஏற்பாடுகள் குறித்து அவர்களுக்கு தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் விளக்கியதை அடுத்து நேற்று முதல் 30 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத்திட்டங்கள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சென்னையில் உள்ள தூதரகத்தை முற்றுகையிட மீனவர்கள் திட்டம்!

## 10 படகுகளில் இலங்கை நோக்கியும் படையெடுப்பு

(இராமநாதபுரம்)

சென்னையில் உள்ள இலங்கை துணைதூதரகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்த தமிழக - புதுவை மீனவர்கள் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

ராமேஸ்வரம், புதுக்கோட்டை, நாகபட்டணம், ஜெகதாப்பட்டணம், கோட்டப்பட்டணம் உள்ளிட்ட தமிழக மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்கச்செல்லும்போது அவர்களை இலங்கை கடற்படையினர் அடிக்கடி பிடித்துச்செல்வதும், துப்பாக்கிச்சூடு நடத்துவதும், தாக்குவதும் தொடர்கதையாகிவருகிறது.

இதைக்கண்டித்து அந்தப் பகுதியைச்சேர்ந்த மீனவர்கள் கடந்த ஒரு வாரமாக காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அரச அதிகாரிகளுடன் நடந்த பேச்சுவார்த்தையும் தோல்வியில் முடிந்துள்ளது.

இந்த நிலையில் இராமநாதபுரத்தில் தமிழக - புதுவை மீனவர் கூட்டமைப்பின் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. இந்தக் கூட்டத்தில் வரும் 21 ஆம் திகதி சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்த மீனவர்கள் முடிவு செய்தனர். மேலும் 31 ஆம் திகதி ஆயிரம் படகுகளில் மீனவர்கள் தங்களது குடும்பத்தினருடன் இலங்கை செல்லவும் முடிவு செய்துள்ளனர்.

### இனப்பிரச்சினை...

இந்தச் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க -

நீண்டகாலமாக இலங்கையில் நடைபெற்றுவரும் பிரச்சினைக்கு தீர்வுகாணும் நோக்கில் விடுதலைப் புலிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட சமாதான பேச்சுக்கள் சுமுகமாக நடைபெற்றன. இதனால் நாட்டில் அமைதி நிலை ஏற்பட்டிருந்தது. ஆனால், தற்போது நாட்டில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

தற்போது தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படுமாயின் அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி பூரண ஆதரவை வழங்கும.

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்காவிட்டால் போர் நிறுத்த உடன்படிக்கை அர்த்தமற்ற ஒன்றாக மாறிவிடும் என்றும் 'அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று இந்திய எதிர்க்கட்சி தலைவர் எல்கே. அத்வானியையும் சந்தித்தார்.

இதன்போது, இருதரப்பு விவகாரங்கள், உறவுகள் குறித்து பேசப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சந்திப்பு சுமார் 30 நிமிடங்கள் சம்பிரதாயபூர்வமாக அமைந்ததாக கூறப்படுகிறது.

இவருடன் முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறக்கொடவும், எல்கே. அத்வானியை சந்தித்தார். இவர்களோடு முன்னாள் இந்தியப் பிரதமர் அடல்பிகாரி வாஜ்பாய், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தியையும் சந்தித்துப் பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### பேச்சுக்கள்....

படை தொடர்பில் புலிகள் இதனை மீள் பரிசீலனை செய்யத் தயாராக விருப்பதாகவும் அவர்கள் எமது அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.

எனவே, புலிகளின் இந்தச் செய்தியை நான் ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்தவேளை எடுத்துக் கூறினேன்.

சுவிற்சர்லாந்தில் நாற்பதாயிரம் இலங்கைத் தமிழர்கள் தற்போது வாழ்கின்றனர். இதுகூட எமது நாட்டை இலங்கை விடயத்தில் தலையிடவைத்ததற்கு முக்கிய காரணமாகும்.

அத்துடன், ஜெனீவாவில் விடுதலைப் புலிகளின் குழுவினருடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் எனது விஜயத்தின்போது தெரியப் படுத்தியுள்ளேன்.

சுவிற்சர்லாந்து இலங்கையில் சமஷ்டி, மனிதவுரிமைகள் மற்றும் கண்ணிவெடி அகற்றல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

### மோட்டார்....

மேற்படி குடும்பஸ்தர் அல்லப்பிட்டி அலுமினியம் தொழிற்சாலைப் பகுதியில் விறகு வெட்டி மோட்டார் சைக்கிளில் கட்டிக்கொண்டு வீடு நோக்கி சென்றுகொண்டிருந்தார். அப்போது வயல் வரம்பு ஒன்றில் மோட்டார் சைக்களில் ஏறியபோது, மோட்டார் சைக்கிள் அவர் மீது புரண்டதன் காரணமாக கழுத்துப் பகுதியில் உட்காயமடைந்த நிலையில் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு பிரேதபரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படக்கப்பட்டது. (தீ)

# குடாநாட்டில் புதிய திட்டங்கள் நோர்வே அமுல்செய்யும்!

## தூதரக பிரதம செயலர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நோர்வே புதிய திட்டங்களை மேற்கொள்ள இருப்பதாகவும், இது தொடர்பாக ஆராயவே தாம் இங்கு வந்ததாகவும் இலங்கைக்கான நோர்வே தூதரகத்தின் பிரதம செயலர் கிறிஸ்ரன் போகர் தெரிவித்தார்.

நேற்று யாழ்.குடாநாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்ட இவர் -

நோராட் நிறுவனத்தின் தற்போதைய செயற்திட்டங்கள் தொடர்பாக நேற்று காலை 10 மணிமுதல் ஒரு மணிவரை கலந்துரையாடல் நடத்தினார்.

பின்னர் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

எனது விஜயத்தின் நோக்கம் நோராட் நிறுவனத்தின் மூலம் 180 மில்லியன் ரூபா செலவில் நடைபெறுகின்ற திட்டங்களை பார்வையிடுவதே. இந்தத் திட்டம் கடந்த வருடம் ஆரம்பமானது. இந்தத் திட்டத்தின் கீழ் 42 குளங்களும், அதனுடன் இணைந்த கால்வாய்களும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தின் கீழ் கழிவு குப்பைகளை மனிதர்களுக்கு தீங்கு விளைவிக்காத வகையில் அகற்றுவதும் கழிவு குப்பைகள் மூலம் இயற்கை பசளைகளைத் தயாரிப்பதுமாகும். இதைவிட கடற்தொழில் தொடர்பாக முக்கிய திட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளோம்.

அந்த வகையில் இலங்கையின் மீன் வளத்தினை அளவிடும் செயற்திட்டங்களாகும். இது யாழ். குடாநாட்டிலும் மேற்கொள்ளப்படவுள்ளது. இன்று நாம் கிளிநொச்சியில் எமது அனுசரணையுடன் போரூட் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகின்ற திட்டங்களையும் பார்வையிடவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

### பொலிஸாரை....

இதைத் தவிர இன்று நடை பெறும் அடையாள அணிவகுப்பிலும் இந்தப் பொலிஸ் விசாரணைக்குழு அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### நோர்வே....

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் தனது பணி குறித்து நோர்வே இந்தியாவிடம் வெளிப்படையாகவும், ஒளிவுமறைவற்ற நிலையிலும் கூறுவதும், இந்தியாவின் ஆலோசனையைக் கேட்பதும் அனுசரணையாளர் பதவிக்கு அவசியமானது.

தற்போதைய காங்கிரஸ் தலைமையிலான இந்திய அரசு முன்னைய அரசின் வெளியுறவுக் கொள்கையையே கொண்டிருக்கிறது. இலங்கை பற்றிய வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் எதுவும் செய்யவில்லை.

இலங்கையின் சமாதான பேச்சுவார்த்தைகள் 16 மாத காலநிலையில் இலங்கையின் சமாதான செயற்பாட்டில் யதார்த்த நிலை மிகவும் கவலை தருவதாகவும் தெரிவித்தார்.

### தந்தை....

ஏற்பட்ட குடும்பப் பிரச்சினை காரணமாக உள்ளூரில் தயாரிக்கப்பட்ட இடியன் எனப்படும் துப்பாக்கி மூலம் தந்தை மகனைச் சுட்டுக்கொன்றுள்ளார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற தமிழீழ காவல்துறையினர் கொலையாளியான தந்தையைக் கைதுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# திருமலையில் இன்று ஹர்த்தால்!

(திருகோணமலை)

திருகோணமலை மாட்டத்தில் நேற்று மாலை தொடக்கம் முழு அளவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக கிழக்குப் பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் நெவில விஜயசிங்க தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு ஊர்காவற் படையினரை விடுவிக்கக் கோரி இன்று சிவில் நிர்வாகம் பாதிப்புக்குள்ளாகும் வகையில் ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற இருப்பதாலேயே, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ், இராணுவம், கடற்படை ஆகியன இணைந்து கூட்டு பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

அமைதியான முறையில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறுமானால், அதனைத் தடைசெய்யமாட்டோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (04)

# கருணாவுக்கு புதிய கட்சியா? தேர்தல் ஆணையாளர் மறுப்பு!

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணா தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் என்ற பெயரில் கட்சி ஒன்றை ஆரம்பித்திருப்பதாக அக்கட்சியின் செயலாளர் எனக் கூறி ஞா.இ.ஞானராசா என்பவர் அறிக்கையொன்றை வெளியிட்டபோதும் -

இதுவரை அவ்வாறான புதிய கட்சி எதுவும் பதிவுசெய்யப்படவில்லை என்று உதவி தேர்தல் ஆணையாளர் கே.சேனநாயக்க தெரிவித்தார்.

கருணாவும், ஞானராசாவும் புதிய கட்சி தொடர்பாக நேற்று தனித் தனியான அறிக்கைகளை வெளியிட்டிருந்தனர்.

கருணாவைத் தலைவராகக் கொண்ட கட்சியின் செயலாளர் எனக் கூறி அறிக்கை வெளியிட்ட ஞானராசா என்பவர் ஈ.என்.டி.எல்.எவ் என்ற குழுவின் தலைவரான பரந்தன் ராஜன் எனப்படும் ஞானசேகரத்தின் சகோதரர் எனத் தெரிய வருகிறது.

பரந்தன் ஞானசேகரன் என்பவர் புளொட்டின் மத்திய குழு உறுப்பினராக இருந்தவர். பின்னர் புளொட்டுடன் முரண்பட்டு ஈ.என்.டி.எல். எவ்வை ஆரம்பித்து இந்திய அமைதிப்படை காலத்தில் அவர்களின் ஆதரவுடன் மாகாணசபையில் செயற்பட்டவர்.

இந்த இயக்கத்தின் முக்கியஸ்தர்களான மட்டக்களப்பின் மாவட்ட முன்னாள் புளொட் இராணுவப் பொறுப்பாளரான பி.எல்.ஓ. மாமா, மனோ மாஸ்டர் ஞானராசா ஆகியோர் இலங்கை திரும்பி கட்சிவேலைகளில் ஈடுபட்டுவருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

# மரண அறிவித்தல்

## கணேசு மங்களேஸ்வரன்



நாரந்தனை மத்தி ஊர்காவற்துறையைச் சேர்ந்த கணேசு மங்களேஸ்வரன் அவர்கள் 12.10.2004 அன்று இறைபதமடைந்துவிட்டார். அன்னார் தயாநிதியின் அன்புக் கணவனும், மதுஷன், விதுஷன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

தகவல் :
செல்வா சனசமூகநிலையம்
நாரந்தனை மத்தி, ஊர்காவற்துறை

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.10.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.